திருவள்ளுவர் ஆண்டு 2037

செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 100 பகுதி : 02 பிப்ரவரி 2006

"நின் நசை வேட்கையின் இரவலர் வருவர் — அது
முன்னம் முகத்தின் உணர்ந்து, அவர்
இன்மை தீர்த்தல் வன்மையானே"

புறம்-3 -தி. இரும்பிடர்த்தலையார்

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1.

தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு •

முகவை மன்னர் திரு. நா.குமரன் சேதுபதி	தலைவர்
திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார்	துணைத்தலைவர்
திரு. இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,	செயலாளர்
திரு. மா. சங்கரபாண்டியன் பி.ஏ., பி.எல்.,	உறுப்பினர்
திரு. டாக்டர் ந.சேதுராமன் M.S., M.Ch., M.N.M.S. (Uro) F.I.C.S.,	உறுப்பினர்
திரு. ச.பரங்குன்றம் பி.ஏ.,	உறுப்பினர்
திரு. இரா.குருசாமி பி.ஏ.,	உறுப்பினர்
திரு. க.முத்தையா பசும்பொன் பி.ஏ., பி.எல்.,	உறுப்பினர்
திரு. இரா.கண்ணன்	உறுப்பினர்
திரு. மா.ச. கார்த்திகேய பாலாஜி பி.இ.,	உறுப்பினர்
திரு. எஸ்.எம்.நாகராசன் பி.ஏ.,	உறுப்பினர்
திரு. பி.வீரணன்	உறுப்பினர்

கல்லூரிக் குழு

டாக்டர் திரு.ந.சேதுராமன், M.S.,M.Ch.(URO).,M.N.M.S.(URO).,FICS.,	தலைவர்
திரு. மா. சங்கரபாண்டியன், பி.ஏ.பி.எல்.,	செயலாளர்
திரு. இரா. அழகுமலை, எம்.ஏ., எம்.ஃபில்.,	உறுப்பினர்
திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார்	உறுப்பினர்
திரு. ச.பரங்குன்றம், பி.ஏ.,	உறுப்பினர்
திரு. இரா.குருசாமி, பி.ஏ.,	உறுப்பினர்
திரு. மா.ச.கார்த்திகேய பாலாஜி, பி.இ.,	உறுப்பினர்
திரு. க.முத்தையா பசும்பொன் பி.ஏ., பி.எல்.,	உறுப்பினர்
திருமதி. வாசுகி ராஜா எம்.எஸ்.சி., எம்.ஃபில்.,	உறுப்பினர்
இராஜா. திரு. முருகதாஸ் தீர்த்தபதி	உறுப்பினர்
திரு. இரா.கண்ணன்	உறுப்பினர்
திரு. மா.ச.மாரியப்ப முரளி பி.ஏ., பி.எல்.,	உறுப்பினர்
டாக்டர் திரு. க சின்னப்பா பி.எச்.டி., முதல்வர்	உறுப்பினர்
டாக்டர் திருமதி. வீ.காந்திமதி பி.எச்.டி., இணைப்பேராசிரியை	உறுப்பினர்
டாக்டர் திருமதி. செ.தனலெட்சுமி பி.எச்.டி., இணைப்பேராசிரியை	உறுப்பினர்

பல்கலைக்கழக உறுப்பினர்

செந்தமிழ்

(தோற்றம் 1903)

தொகுதி : 100
பகுதி : 02
பிப்ரவரி 2006

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு **2037**

வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867 - 02.12.1911

இதழ்க் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	ரூ. 60	ரூ. 600
புரவலர் கட்டணம்	ரூ. 1000	ரூ. 2000
தனி இதழ்க் கட்டணம்	ரூ. 6	ரூ.

ஆசிரியர் **இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர் – மதுரைத் தமிழ்ச்சங்கம்.

பதிப்பாசிரியர் **இரா. சதாசிவம்** எம்.ஏ., எம்.ஃபில்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.

பொருளடக்கம்

இதழ்மணம் 423

திருவாசகத்தில் நாட்டுப்புறப் பாடல் அடிப்படையில் தோன்றிய சிற்றிலக்கிய வகைகள் 425
உ.கருப்பத்தேவன்

மரபுத்தொடர்கள் காட்டும் தமிழர் பண்பாடு 439
வீ.ரேணுகாதேவி

சிந்தாமணி கூறும் அறம் 446
தி.வே.கோபாலய்யர்

இதழ்மணம்

"திருவாசகத்தில் நாட்டுப்புறப் பாடல் அடிப்படையில் தோன்றிய சிற்றிலக்கிய வகைகள்" என்னும் தலைப்பில் பகுதிநேர ஆய்வு மாணவர் **உ.கருப்பத்தேவன்** கட்டுரை இடம்பெறுகிறது. அவர் கருத்துக்களை எளிய இனிய ஆற்றொழுக்கான நடையில் விளக்கி எழுதியுள்ளார். செய்திகளை வரிசைப்படுத்தித் தொகுத்து அளித்துள்ளார். திருவாசகம் மக்கள் இலக்கியம் ஆகையால் வீதியிலும் வீடுகளிலும் விளையாடும் மகளிரும் ஆடவரும் பாடும் இசைத்தமிழ் ஆற்றல் பொதிந்து திருவாசகம் மக்கள் நெஞ்சில் இடம் பிடித்துள்ளது. அதற்குரிய இலக்கிய வடிவத்தை ஆய்வுநோக்கில் பகுதிநேர ஆய்வுமாணவர் கருப்பத்தேவன் எழுதியுள்ள கட்டுரை நடைக்காகவும் இலக்கிய இன்பத்திற்காகவும் பக்திச் சுவைக்காகவும் படிக்கத்தக்கது.

அடுத்து **"மரபுத்தொடர்கள் காட்டும் தமிழர் பண்பாடு"** என்னும் பேராசிரியர் ***வீ.ரேணுகாதேவி*** கட்டுரை இடம்பெறுகிறது. மரபுத்தொடர்கள் தமிழர் பண்பாட்டை வழக்காற்று பாங்கில் சொல் அழுத்தம் பெற்று கேட்பவர் பேசுபவர் மனஉணர்வை பாதிக்கும் போக்கை மொழியியல் பார்வையில் பேராசிரியர் கட்டுரை வடிவில் அளித்துள்ளார்கள்.

தொல்காப்பிய இலக்கிய உத்தியை தேவர் தம் காப்பியத்தில் தக்கவாறு பதிவு செய்திருப்பதை அறிஞர் **தி.வே.கோபாலய்யர்** அவர்கள் நூல் முழுவதும் பரந்துபட்ட செய்திகளைத் தொகுத்துக் கட்டுரை அளித்துள்ளார்கள். கட்டுரை நீண்டு இருப்பதால் தொடர் கட்டுரையாக வெளிவந்து கொண்டிருக்கிறது. இக்கட்டுரையில் சீவகசிந்தாமணி கருத்து நிலையையும் அடியார்க்கு நல்லார் உரை நலத்தையும் கற்றுத் தெளியலாம். ***"சிந்தாமணி கூறும் அறம்"*** என்னும் கட்டுரை பெரிதாக இருந்தாலும் நூல் முழுவதும் பரந்துகிடக்கும் அறநூல் கருத்துக்களை ஆசிரியர் முயன்று வெளிப்படுத்தியுள்ளது சிந்தித்தற்குரியது.

"நின் நசை வேட்கையின் இரவலர் வருவர்—அது
முன்னம் முகத்தின் உணர்ந்து அவர்
இன்மை தீர்த்தல் வன்மையானே"

விளக்கம் :

உழைப்பாலும் அறிவின் வலிமையாலும் ஈட்டிய பொருளைத் தன்னை நாடி வருவோர், துன்பத்துயர ரேகை அவர் முகத்தில் ஓடி இருப்பதைக் குறிப்பால் உணர்ந்து அவர்க்கு ஈதலும் இசைபட வாழ்தலும் குடிப்பிறப்பாகும்.

அத்தகைய உனக்கு சொல் தவறாத வாய்மையாளன் என்ற ஏற்றம் உண்டாகுக என "நிலம் பெயரினும் நின்சொல் பெயரல்" என வாழ்த்துகிறார்.

திருவாசகத்தில் நாட்டுப்புறப் பாடல் அடிப்படையில் தோன்றிய சிற்றிலக்கிய வகைகள்

உ. கருப்பத்தேவன்
பகுதி நேர முனைவர்பட்ட ஆய்வாளர்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை–21.

முன்னுரை

நாட்டுப்புறப் பாடல்கள் நாட்டுப்புற மக்களின் வாழ்க்கைக் கூறுகளையும், பண்பாட்டு சிந்தனைகளையும் வெளிப்படுத்துவன. அவை ஏட்டில் எழுதாக் கவிதைகளாகவும் வாய்மொழி இலக்கியங்களாகவும் திகழ்கின்றன. நாட்டுப்புறப் பாடல் வடிவங்கள் எளிமையானவை. இனிமையானவை. இசைத்தன்மை கொண்டவை. நாட்டுப்புறப் பாடல்கள் ஏட்டிலக்கியக் கவிஞர்களைப் பெரிதும் ஈர்த்துள்ளது. மாணிக்கவாசகர் நாட்டுப்புறப் பெண்கள் விளையாட்டை அடிப்படையாகக் கொண்டு பல சிற்றிலக்கியங்களைத் தோற்றுவித்துள்ளார். அவற்றை விரிவாக ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திருவாசகத்தில் நாட்டுப்புறப் பாடல் அடிப்படையில் தோன்றிய சிற்றிலக்கிய வகைகள்

பெண்கள் தம் அன்றாட அலுவல்களின்போதும், இளம் பெண்கள் தங்கள் விளையாட்டின் போதும் பாடுகின்ற நாட்டுப்பாடல் வடிவங்களையும் மாணிக்கவாசகர் தன்னுடைய திருவாசகத்தில் தம் இறையுணர்வை வெளிப்படுத்தும் கருவியாகக் கையாண்டுள்ளார்.

பெண்கள் விளையாட்டு

மாணிக்கவாசகர் பாடியுள்ள மூன்று பெண்கள் அம்மானைக்காய் ஆடும்போது பாடும் பாடலாக அமைந்த திருவம்மானை, சிவனது திருக்கோயிலில் இறைவனது மெய்ப்பூச்சிற்குரிய பொன்நிறப்பொடி இடிக்கும் பெண்கள் பாடும் வரிப்பாட்டு அமைப்பில் அமைந்த திருப்பொற்சுண்ணம், பெண்கள் முறத்தில் தெள்ளிக் கொழித்து விளையாடும் திருத்தெள்ளேணம், வினா விடைப் பாங்கில் அமைந்த திருச்சாழல், பெண்கள் உயர உயர எழுந்து குதித்தாடும் திருவுந்தியார்,

பெண்கள் தங்கள் மகிழ்ச்சியால் பூரித்த தோள் நோக்கிக் கைவீசி விளையாடும் திருத்தோணோக்கம் திருவெம்பாவை போன்ற சிற்றிலக்கிய வடிவங்கள் இவ்வகையில் அமைந்தவையாகும். மாணிக்கவாசகர் இம்மகளிர் விளையாட்டு வகைப்பாடல்களில்—பதிகங்களில் சிவபெருமானின் கருணையினையும் அவனே முழுமுதற் கடவுள் என்பதையும் இனிதே விளக்கியுள்ளார்.

திருவம்மானை

'அம்மானை' என்பது பண்டைக்காலத்தில் தமிழ்நாட்டுப் பெண்கள் விளையாடும் ஒருவகை விளையாட்டாகும். அவர்கள் அம்மானைக் காய்களைக் கைகளில் வைத்துக் கொண்டு விளையாடுவர். அம்மானைக்காய் விளையாடும் பெண்கள் தங்களுக்கு நல்ல கணவன் வாய்க்க வேண்டுமென்றும், அந்நல்ல கணவனின் சிறப்புக்களை வரிப்பாட்டாகவும் பாடி ஆடி மகிழ்வர். அம்முறையில் மாணிக்கவாசகர் சிவபெருமான் மீது கொண்டிருந்த எல்லையற்ற காதலால் கசிந்துருகி அவனது திருவடியில் இரண்டறக் கலக்கின்ற முக்தியை எய்தற்பொருட்டு 'அம்மானை' பாடியருளியுள்ளார். அது 'திரு' என்னும் அடைமொழியைப் பெற்றுத் 'திருவம்மானை' என வழங்கப்படுகின்றது. பொதுவாகப் பெண்களை அம்மா என்று அழைப்பது தமிழ் மரபாகும். 'அம்மானை' என்பது இலக்கிய மரபாகும். இங்கு 'அம்மானை' என்னும் சொல்லாட்சி வரிப்பாட்டினையும் பெண்களின் ஆடலையும் குறித்து நிற்கின்றது. அச்சொல் விளிவேற்றுமையில் 'ஐ' என்னும் ஈறுகெட்டு 'ஆய்' என்னும் ஈற்றினைப் பெற்று 'அம்மானாய்' என்று ஒவ்வொரு பாட்டின் ஈற்றிலும் அமைந்திருப்பதைக் காணலாம்.

சிலப்பதிகாரத்தின் வாழ்த்துக் காதையில் 'அம்மானை வரி' என்ற தலைப்பில் நான்கு பாடல்கள் அமைந்துள்ளன.

"அம்மனை தங்கையிற் கொண்டங் கணியிழையார்
தம்மனையிற் பாடுந் தகையேலோ ரம்மானை
தம்மனையிற் பாடுந் தகையெலாந் தார்வேந்தன்
கொம்மை வரிமுலைமேற் கூடவே யம்மானை
கொம்மை வரிமுலைமேற் கூடிற் குலவேந்தன்
அம்மென் புகார்நகரம் பாடேலோ ரம்மானை"

— (சிலம்பு, வஞ்சிக் காண்டம், பா.எண் 19)

சிலப்பதிகாரத்தில் இவ்வாறு அமைந்துள்ள நான்கு பாடல்களும் சோழமன்னனின் சிறப்புக்களைப் பாடுவனவாக அமைந்துள்ளன. இவ்வியல்பினைப் பின்பற்றிச் சிவபெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு மாணிக்கவாசகர் பாடியிருப்பதே திருவம்மானையாகும்.

“ஊனாய் உயிராய் உணர்வாய்என் உள்கலந்து
தேனாய் அமுதமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்
வானோர் அறியா வழியெமக்குத் தந்தருளும்
தேனார் மலர்க் கொன்றைச் சேவகனார் சீரொளிசேர்
ஆனா அறிவாய் அளவிறந்த பல்லுயிர்க்கும்
கோனாகி நின்றவா கூறுதுங்காண் அம்மானாய்”
– (திருவம்மானை, 16)

என்று இறைவனாகிய சிவபெருமான் தன்னை ஆட்கொள்ள வேண்டும் என்னும் கருத்தில் இருபது பாடல்களை அமைத்துப் பாடியுள்ளார் மாணிக்கவாசகர். மாணிக்கவாசகரின் திருவம்மானை ஆறடித் தரவுக் கொச்சகக் கலிப்பாவினால் பாடப்பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த தத்துவராயர் அம்மானைப் பாடலைப் பாடியுள்ளார். சிற்றிலக்கிய வகைகளில் ஒன்றான கலம்பகத்தில் அம்மானையும் ஓர் உறுப்பாக அமைந்துள்ளது. பெண்பாற்பிள்ளைத் தமிழிலும் அம்மானை ஒரு பருவமாக அமைந்துள்ளது. இப்பருவத்தைப் பற்றிப் பத்துப் பாடல்கள் அமைத்துப் புலவர்கள் பாடியுள்ளனர். இவை தவிர பல கதைப்பாடல்களும் அம்மானை என்ற தலைப்பில் கிடைத்துள்ளன. சான்றுகளாக இராமப்பையன் அம்மானை, மதுரைவீரன் அம்மானை, மூவர் அம்மானை, ஐவர் அம்மானை, வைகுந்தம்மானை போன்ற கதைப்பாடல்களைக் குறிப்பிடலாம்.

திருப்பொற்சுண்ணம்

பலவகைப் மணப்பொருட்களையும் உரலில் போட்டு இடிக்கப்படுவது பொற்சுண்ணமாகும். இது பொன் போன்ற நிறமுடையதாகும். பொன்னையும் இதில் சிறிது சேர்ப்பர். சிவபெருமானின்

திருமஞ்சன நீராட்டிற்காக இது பயன்படுத்தப்படுகின்றது. நாட்டுப்புறப்பாடல் வடிவமைப்பில் அமைந்துள்ள பொற்சுண்ணத்தை வள்ளைப்பாட்டு, உரற்பாட்டு, உலக்கைப்பாட்டு, அம்மானைப்பாட்டு முதலான பெயர்களால் வழங்கப்பெறும். காதலன் திருமுழுக்குக்கு வேண்டிய மணப்பொடியினைக் காதலியும் அவள் தோழியும் காதலன் பேரையும் புகழையும் பாடி இடிப்பது பொற்சுண்ணமாகும்.

மாணிக்கவாசகர் பாடிய இச்சிற்றிலக்கியத்தின் பொருள் சிவபெருமான் திருமுழுக்குக்கு வேண்டிய மணப்பொடியை அவன் புகழ்பாடிக் கொண்டே உரலில் இட்டு இடித்தல் என்பதாகும். இம்முறையில் குறிஞ்சிக் கலியில் பல வள்ளைப்பாட்டுக்கள் காணப்படுகின்றன.

"அகவினம் பாடுவாம் தோழி யமர்கண்
நகைமொழி நல்லவர் நாணும் நிலைபோல்
தகைகொண்ட ஏனலுட் டாழ்குர லுரீஇ
முகைவளர் சாந்துரன் முத்தார் மருப்பின்
வகைசா லுலக்கை வயின்வயி னோச்சிப்
பகையினோய் செய்தான் பயமலை யேத்தி
யகவினம் பாடுவாம் நாம்"
(குறிஞ்சிக்கலி, பா.எண் 4 1-7)

இறைவன் என்ற தத்துவத்தைக் கண்ட மனிதன் தனக்கு விருப்பமானவற்றையெல்லாம் இறைவனுக்கு அர்ப்பணம் செய்யத் தொடங்கினான். அவன் அந்த இறைவனுக்கு உருவத்தை அமைத்தபோது, தன்போன்ற மனித உருவத்தையே அதற்கும் தந்தான். தனக்கு விருப்பமான உணவு, உடை, அணிகலன், பூ, நீர் முழுக்கு, சாந்து முதலியவற்றை எல்லாம் இறைவனுக்கும் கொடுத்தான். சுண்ணமும் இதற்கு விதிவிலக்கன்று. மக்கள் இடித்துப் பயன்படுத்துகின்ற சுண்ணத்தைச் சிவனுக்கே உரியதாக்கிவிட்டார் மாணிக்கவாசகர் என்று மு. அருணாசலம் திருவாசகக் குறிப்புக்கள் (பக்.26, 27) என்னும் நூலில் குறிப்பிடுவதும் ஒப்புநோக்கத்தக்கதாகும் தான் சென்ற இடந்தோறும் பெண்களின் வேலையும் விளையாட்டும் கூடிய இசைப்பாக்களைக் கூர்ந்து நோக்கிய மாணிக்கவாசகர், அவற்றை அனைவரும் பாடும் வகையில் இறையனுபவத்தை ஏற்றிச் சிற்றிலக்கிய வகைகளாகப் பாடியுள்ளார்.

"அயன்தலை கொண்டுசெண்டு ஆடல்பாடி அருக்கன் எயிறு பறித்தல்பாடிக் கயம்தன்னைக் கொன்றுஉரி போர்த்தல்பாடிக் காலனைக் காலால் உதைத்தல்பாடி இயைந்தன முப்புரம் எய்தல்பாடி ஏழை அடியோமை யாண்டுகொண்ட நயந்தனைப் பாடிநின்று ஆடியாடி நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே" – (திருப்பொற்சுண்ணம், 18) என அமையும் மாணிக்கவாசகரின் திருப்பொற்சுண்ணம் இருபது அறுசீரடி ஆசிரிய விருத்தப் பாடல்களால் அமைந்துள்ளது.

திருத்தெள்ளேணம்

'தெள்ளேணம்' என்பது மகளிரது விளையாட்டுக்களுள் ஒருவகையாகும். தெய்வத்தன்மை பொருந்திய 'படகம்' என்னும் இன்னிசைக் கருவியைக் கொண்டு சிவபெருமானது திருவடிப் பெருமைகளைப் பாடிக் கொட்டாட்டுச் சிறப்புக்களை உணர்த்துவது மாணிக்கவாசகர் பாடிய திருத்தெள்ளேணம் என்னும் பகுதியாகும்.

"உவலைச் சமயங்கள் ஒவ்வாத சாத்திரமாம்
சவலைக் கடல் உளனாய்க் கிடந்து தடுமாறும்
கவலைக் கெடுத்துக் கழலிணைகள் தந்தருளும்
செயலைப் பரவிநாம் தெள்ளேணம் கொட்டாமோ"
– (திருத்தெள்ளேணம், 17)

என வரும் மாணிக்கவாசகரின் திருத்தெள்ளேணப் பாடலைக் குறிப்பிடலாம். பொய்ச் சமயங்களும் முரண்படுகின்ற சமய சாத்திர நூல்களும் மனக்குழப்பத்தை உண்டு பண்ணுகின்றன. அதனால் தடுமாறிக் கிடந்த தன் கவலையை ஒழித்து, சிவபெருமான் தன்னை ஆட்கொண்டான் என்றும், அவனது சீரிய செயல்களைப் புகழ்ந்து தெள்ளேணம் கொட்டுவோம் என்றும் மாணிக்கவாசகர் இருபது பாடல்களைப் பாடியிருப்பதைக் காண முடிகிறது.

திருச்சாழல்

'சாழல்' என்பது பெண்கள் விளையாட்டுக்களுள் ஒன்றாகும். ஒருத்தி ஒரு கதையின் செயலைப்பற்றி வினாத்தொடுக்க, மற்றொருத்தி அக்கதையின் இடமாகத் தோற்றிய முரண்பாட்டினை நீக்கி அதன் உட்பொருளை விளக்கி விடைகூற, இம்முறையில் பெண்கள் இருவர் ஒரு கதையைப் பற்றி வினாவும் விடையும் நிகழ்த்தி உரையாடி

விளையாடும் முறையில் அமைந்தது 'சாழல்' என்னும் இவ்விளையாட்டாகும். சிலப்பதிகார உரையில் 'நற்சாழல்' எனப் பலவரிக்கூத்துள் ஒன்றாகக் குறிக்கப்படுவதே 'சாழல்' என்னும் இச்சிற்றிலக்கிய வகையாகும். இதற்குச் சான்றாக,

"அம்பரமாம் புள்ளித்தோல் ஆலாலம் ஆர்அமுதம்
எம்பெருமான் உண்டசதுர் எனக்கறிய இயம்பேடீ
எம்பெருமான் ஏதுஉடுத்துஅங்கு ஏதுஅமுது செய்திடினும்
தம்பெருமை தானறியாத் தன்மையன்காண் சாழலோ"
– (திருச்சாழல், 19)

எனவும் வரும் மாணிக்கவாசகரின் திருச்சாழல் பாடல்களைக் குறிப்பிடலாம். பரமனாகிய சிவனே பிரபஞ்சத்தில் அனைத்துமாக உள்ளான். ஆதலால் எதை வேண்டுமானாலும் அவனுடைய ஆடை எனலாம். பாம்பின் பல்லில் நஞ்சு இருப்பதைப்போன்று பிரபஞ்சத்திலுள்ள நன்மை, தீமை அனைத்தும் அவன் மயமாகும். அந்நிலையில் நஞ்சு அவனுக்கு அமிர்தம் ஆவதில் வியப்பொன்றும் இல்லை. அவன் மகிமை முழுவதும் அவனுக்கே தெரியாது என்றால் இனி அ தை முற்றும் அறிவார் யார்? என மாணிக்கவாசகரின் திருச்சாழல் பாடல்கள் வினாவிடைப்பாங்கில் தத்துவக் கண்ணோட்டத்தில் அமைந்திருப்பதைக் காணலாம்.

திருப்பூவல்லி

'திருப்பூவல்லி' என்னும் சொல்லிற்கு 'அழகிய பூக்களையுடைய கொடி' என்பது பொருளாகும். இச்சொல்லை மாணிக்கவாசகர் பூக்கொய்தலாகிய இளம்பெண்கள் விளையாட்டினையும் அவ்விளையாட்டிற் பாடப்பெறும் வரிப்பாடலையும் குறித்த பெயராக ஆண்டுள்ளார். சிலப்பதிகார உரையில் அடியார்க்கு நல்லார் குறித்துள்ள பல்வரிக் கூத்தினுள் ஒன்றாகிய 'கொய்யு முள்ளிப்பூ' என்பது இப்பூவல்லியாகிய விளையாட்டினையே குறிக்கின்றது எனலாம். இறைவனுக்குச் சாத்திப் படைத்து வழிபடுதற்கென நறுமலர் கொய்யும் சிறுமியர்கள் அம்முதல்வனது பெருங்கருணைத் திறத்தை வியந்துபாடும் முறையில் மாணிக்கவாசகர் இத்திருப்பூவல்லியினை அருளிச் செய்துள்ளார்.

எண்குணத்தானாகிய இறைவனடிகளை வணங்குதற்கேற்ற தலைமையமைந்த தலையும், அவனுடைய பொருள்சேர் புகழ்த்திறங்களை விரித்துரைத்தற்கு ஏற்ற நாநலம் வாய்ந்த வாயும், இறைவன் திருவடிக்கு ஏற்ற திருப்பணிகளை விருப்பத்துடன் இணங்கிச் செய்வதற்குரிய நேயமலிந்த அடியார் திருக்கூட்டமும் ஆகிய சாதனங்களைத் தந்தருளி, ஆருளுருவாகிய அம்மையுடன் கூடித் திருவம்பலத்திலே ஆடல் புரிந்தருளும் கூத்தப்பெருமானது திருவருட் குணத்தைப் பாடிப் பரவி, சிவன் திருவடிகளில் அருச்சித்தற்கு உரிய நறுமலர்களைக் கொய்வோமாக என அன்புடையாரை அழைக்கும் முறையில் அமைந்தது.

"வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்தவைத்து
இணங்கத்தன் சீர்அடியார் கூட்டமும் வைத்து எம்பெருமான்
அணங்கொடு அணிதில்லை அம்பலத்தே ஆடுகின்ற
குணங்கூரப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ"
– (திருப்பூவல்லி, 7)

என்னும் திருப்பாடலாகும். இப்பாடல்,

"வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்தவா வினையே னெடுங்காலமே"
– (திருநாவுக், தேவாரம், 5:90:7)

என வரும் திருநாவுக்கரசரின் திருப்பாடலை ஒத்து அமைந்திருத்தல் நோக்கத்தக்கதாகும். மாணிக்கவாசகரின் 'திருப்பூவல்லி' என்னும் இப்பதிகமும், இதனை அடுத்தபதிகமாகிய 'திருவுந்தியாரும்' முறையே பத்தொன்பது, பத்தொன்பது திருப்பாடல்களைக் கொண்டுள்ளன. அச்சிடப்பட்ட சில பதிப்புக்களில் இவ்விரு பதிகங்களிலும் முறையே 'மாவார வேறி', 'ஏகாசமிட்ட' என்னும் முதற்குறிப்புடைய பாடல்கள் இருபதாவது பாடல்களாக இடம் பெற்றுள்ளன.

இப்பாடல்கள் இரண்டும் பழைய பதிப்புக்களில் இடம்பெறவில்லை. திருவாசகத்துக்குக் கிடைத்துள்ள உரைகளுள் மிகவும் பழமையானது. சீகாழித் தாண்டவராயர் உரையாகும். அவ்வுரையில் இவ்விரு பாடல்களும் இடம் பெறவில்லை. ஆதலால் இவ்விருபாடல்களும்

பிற்காலத்தவரால் பாடிச் சேர்க்கப்பெற்ற மிகைப் பாடல்கள் எனக் கருத வேண்டியுள்ளது.

திருவுந்தியார்

'உந்தி பறத்தல்' என்பது மகளிர் விளையாட்டுக்களுள் ஒருவகையாகும். உந்தி பறத்தல் என்பது விளையாடும் பருவத்து இளம்பெண்கள் பாட்டுடைத் தலைவனாகிய சிவபெருமானது வெற்றியை வாயால் புகழ்ந்து கொண்டு உயர உயர எழுந்து குதித்தலாகும். பெண்கள் இருவர் சிவபெருமானுடைய வெற்றிச் செயல்களைப் புகழ்ந்து கொண்டு துள்ளிக் குதித்து விளையாடும் முறையில் மாணிக்கவாசகரால் அருளிச் செய்யப்பெற்ற பனுவலே திருவுந்தியார் ஆகும். இதற்கு 'ஞானவெற்றி' என முன்னோர் பெ யரிட்டு அழைத்துள்ளனர். அருட்சக்தியுனுடைய வல்லமையைப் புலப்படுத்தும் நிலையில் அமைந்தது இப்பனுவல் ஆகும்.

"அரன்சீர் பாவமுறு தீமையறப் பாடல் திருவுந்தியதே"

என்பது திருவாசகவுண்மையாகும் என க.வெள்ளைவாரணன், பன்னிருதிருமுறை வரலாறு–இரண்டாம் பகுதி ப.205ல் குறிப்பிடுவதைக் காணலாம். இதற்குச் சான்றாக,

> "தேரை நிறுத்தி மலைஎடுத் தான்சிரம்
> ஈர்ஐந்தும் இற்றவாறு உந்தீபற
> இருபதும் இற்றதென்று உந்தீபற"–(திருவுந்தியார், 19)

என வரும் மாணிக்கவாசகரின் திருவுந்தியார் பாடலைச் சுட்டலாம்.

திருத்தோணோக்கம்

பெண்கள் ஒருவர் தோளை ஒருவர் அன்போடு நோக்கித் தொட்டும் தட்டியும் அகமகிழ்ந்து ஆடும் விளையாட்டே தோணோக்கமாகும். 'தோணோக்கம்' என்பதற்கு மகிழ்ச்சிப் பெருக்கினால் தம் தோள்கள் பூரித்து மேலோங்க அவற்றை நோக்கிக் கைவீசியாடும் பெண்களது விளையாட்டு எனப் பொருள் கொள்ளலாம். இதனை அடியார்க்கு நல்லார் தம் உரையில் 'நல்லார்தம் தோள்வீச்சு' எனக் குறிப்பிட்டுள்ளார். மாணிக்கவாசகர் தம் திருச்சதகத்தில்,

"போற்று மடியாருள் நின்று நகுவேன் பண்டு தோள்நோக்கி"
– (திருச்சதகம் 60)

என அடியார் நடுவே நின்றமையால் தமக்குண்டான மகிழ்ச்சிப் பெருக்கைக் குறிப்பிடுதலானும்,

"குளிர்ந்து தோள்நோக்கினார்"–(சீவகசிந்தாமணி, வரி எண் 1843)

என சீவகசிந்தாமணியும் "தாமின்னும் நின்றாராந் தோணோக்கி" (கம்பராமாயணம் மாயாசகை, 82) எனக் கம்பராமாயணமும் குறிப்பிடுவதாலும் தோணோக்கம் என்பது மகிழ்ச்சிப் பெருக்கினால் பூரித்த தோள்களை நோக்கியாடுதல் என்பதை உய்த்துணரலாம்.

மாணிக்கவாசகரின் திருத்தோணோக்கத்தில் அமைந்துள்ள பதினான்கு பாடல்களும் நாலடித் தரவுக் கொச்சகக் கலிப்பாவில் ஆனதாகும். இதற்குச் சான்றாக,

"பொருள்பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல்விளங்கச்
செருப்புற்ற சீரடி வாய்க்கலசம் ஊனமுதம்
விருப்புற்று வேடனார் சேடறிய மெய்குளிர்ந்தங்கு
அருள்பெற்று நின்றவா தோணோக்கம் ஆடாமோ"
– (திருத்தோள்நோக்கம், 3)

என்னும் பாடலைக் குறிப்பிடலாம். ஒவ்வொரு பாடலிலும் சிவனின் அருட்செயல்களைப் பற்றிய புராணக் குறிப்புக்கள் உட்பொதிந்திருப்பதைக் காணலாம்.

திருவெம்பாவை

மாணிக்கவாசகர் திருவண்ணாமலையினை அடைந்து இறைவனை வழிபட்டு அத்தலத்தில் தங்கியிருக்கும்போது மார்கழித்திங்கள் வந்தது. இளம்பெண்கள் வைகறைப் பொழுதில் துயிலுணர்ந்தெழுந்து ஆதியும் அந்தமும் இல்லாத அருட்பெருஞ்சோதியாகிய இறைவனது புகழ்சேர் பொருள்மொழியினைப் போற்றி இசைத்துத் தம்மையொத்த மகளிரைத் துயிலெழுப்பிக் கொண்டு சென்று பொய்கையில் நீராடி அண்ணாமலையானை அன்பினால் பாடிப்போற்றி மார்கழி நீராடலாகிய நோன்பினைச் சிறப்புறக்

கொண்டாடினர். அக்காட்சியினைக் கண்ட மாணிக்கவாசகர், அம்மகளிர் கூறும் உரைகளாக இத்திருவெம்பாவையைப் பாடினார் என கடவுண்மாமுனிவர், திருவாதவூரடிகள் புராணம், திருவம்பலச் சருக்கம் செய்யுள் 383–385)ல் குறிப்பிட்டுள்ள திரு+எம்+பாவை= திருவெம்பாவை. இதில் 'திரு' என்பது தெய்வத்தன்மையையும் 'எம்' என்பது உயிர்த்தன்மையையும் 'பாவை' என்பது வழிபாட்டிற்கு அமைந்த திருவுருத்தன்மையையும் குறிக்கும். மார்கழி மாதத்தில் மகளிர் ஒருவரையொருவர் துயில் எழுப்பி அழைத்துச் சென்று நீராடி இறைவனைப் போற்றுவது திருவெம்பாவையாகும். இதனை,

"தரவின்றாகித் தாழிசை பெற்றும்"
– (தொல், பொருள், செய்யுளியல், 149)

என்னும் தொல்காப்பியச் செய்யுளியல் நூற்பாவிற்கு உரையெழுதிய பேராசிரியர் 'பாவைப்பாட்டு' எனக் குறிப்பிட்டுள்ளார். தெய்வத்தன்மை வாய்ந்த உமையவள் மகளிரை இயக்குவதோடு அவர்களுக்குத் துணையாகவும் விளங்கி பாவைத் திருவுருவில் நின்று பயனளிக்கும் தன்மையினை வியந்து போற்றுவது மாணிக்கவாசகரின் இத்திருவெம்பாவையாகும். இதில் இருபது பாடல்கள் உள்ளன. ஒவ்வொரு பாடலின் ஈற்றடியின் ஈற்றுச் சீரும் 'எம்பாவாய்' என முடிந்திருப்பது நோக்கத்தக்கதாகும்.

> "இந்தப் பாடல்களிலே இறைவனுடைய பெருமையைப் பெண்கள் வாய்மொழியாகச் சொல்லச் செய்ததோடல்லாமல், பெண்களுக்குள் நடக்கும் விளையாட்டையும் பரிகாசத்தையும் (ஏளனம்) சுவைபட பாடியிருக்கின்றார். மாணிக்கவாசகர் பாடிய திருவெம்பாவையானது பிற்காலத்தில் பலர் பாவைப் பாட்டுப் பாடக் காரணமாக இருந்திருக்கின்றது"

என மு. அருணாசலம், திருவாசக ஆராய்ச்சிக் குறிப்புகள் பக்கம் 6ல் குறிப்பிடுவது ஏற்புடையதே அகும்.

தைமாதம் முதல் ஆனிமாதம் வரையில் ஆறு மாதகாலம் சூரியனுடைய உத்தராயணமாகும். அக்காலம் தேவர்களுக்குப் பகலாகும்.

ஆடிமாதம் முதல் மார்கழி மாதம் வரையில் சூரியனுடைய தட்சணாயணமாகும். அது தேவர்களுக்கு இரவாகும். மக்களுக்கு அதிகாலை நான்கு மணியிலிருந்து ஆறு மணி வரையில் பிரம்ம முகூர்த்தமாகும். கடவுள்வழிபாட்டிற்கு அதுவே சிறந்த நேரமாகும. மக்கள் குறிப்பாகப் பெண்கள் அம்மாதத்தில் சிறப்பாக வழிபாடு செய்து வருகின்றனர். மக்கள் மார்கழி மாதத்தில் அதிகாலையில் எழுந்து இறைவனை வழிபடுதற்காகத் திருவண்ணாமலையில் மாணிக்கவாசகர் இத்திருவெம்பாவையைப் பாடியருளியுள்ளார். மக்கள் பரபோதம் பெற்றுத் துயலெழ இத்திருவெம்பாவைப் பாடல்கள் எக்காலத்திலும் எங்கும் யாவர்க்கும் பயன்படும் முறையில் அமைந்திருப்பது நோக்கத்தக்கதாகும்.

திருப்பள்ளியெழுச்சி

தொல்காப்பியர் புறத்திணையியலில் பாடாண் திணையில்,

> "தாவில் நல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்
> சூதர் ஏத்திய துயிலெடை நிலையும்" –தொல்.பொருள்.
> புறத்.பாடாண் திணை பேரா. (உ.ஆ.) நூற்பா எண் 36)

எனவரும் நூற்பாவிற்குத் தமது வலியாலே பாசறைக்கண் ஒரு மனக்கவற்சியின்றித் துயின்ற அரசர்க்கு நல்ல புகழைக் கொடுத்தலைக் கருதிய சூதர், அத்துயிலெடுப்பின் ஏத்திய துயிலெடை என்ற துறையைக் குறித்துள்ளார். இந்நூற்பாவிற்கு உரையெழுதிய நச்சினார்க்கினியர்,

> "துயிலெடை – துயிலினின்றும் எழுப்புதல், அஃதாவது பள்ளியெழுச்சி. துயிலெடை நிலையாகிய இத்துறை, அரசர்க்கு உரியதாய்த் தொன்றுதொட்டு வருமென்பதூஉம், சூதர், மாகதர், வேதாளிகர், வந்திகர் முதலாயினோருள் சூதர் என்பவரே இங்ஙனம் வீரத்தால் துயின்றாரைத் துயிலெழுப்புவர் என்பதூஉம், யாண்டும் முன்னுள்ளாரையும் பிறரையும் கூறப்படுமென்பதூஉம் கொள்க" – (நச்சினார்க்கினியர் (உ.ஆ.) நூற்.36)

எனக் குறிப்பிட்டுள்ளார். புறத்திணைத் துறைகளுள் ஒன்றாகிய இத்துயிலெடை நிலை, உறங்கலும் விழித்தலும் உடையராய் உணர்த்த உணரும் இயல்பினராகிய அரசர் முதலிய மாந்தர்க்கே உண்மையில்

உரியது. உறங்கலும் விழித்தலும் இல்லாத இறைவனைப் போற்றுதற்குரியதன்று. ஆயினும் 'துஞ்சும் பொழுதாடுஞ்சோதி' யாகிய சிவனை உறங்கி விழிக்கும் இயல்பினராகிய மாந்தர் தாம் துயிலெழுங் காலத்துத் தொழுதுகொண்டு எழுதல் இன்றியமையாததாதலின், அவனருளாலே அவன்தாள் வணங்கித் துயிலெழும் வழிபாட்டு நெறிமுறையினை மாந்தர்க்கு அறிவுறுத்தும் நோக்கத்தில் மாணிக்கவாசகர் பாடியருளியதே திருப்பள்ளியெழுச்சி என்னும் இப்பதிகமாகும். தூங்கி விழிக்கும் வேந்தரை எழுப்பும் துயிலெடை என்னும் துறையிலும் இது வேறுபட்டதாகும். ஆதலால் சான்றோர் இதனைத் தொன்றுதொட்டுத் திருப்பள்ளியெழுச்சி என வழங்கி வருகின்றனர்.
இதனை,

> "நீறணிந்தார் அகத்திருளும் நிறைகங்குற் புறத்திருளும்
> மாறவருந் திருப்பள்ளி யெழுச்சியினில்"

எனவரும் சேக்கிழாரின் பெரியபுராணப் பாடலடிகளால் அறியலாம்.

மாணிக்கவாசகரின் திருப்பள்ளியெழுச்சியில் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் என்னும் பாவினத்தால் அமைந்த பத்துப்பாடல்கள் உள்ளன. ஒவ்வொரு பாடலின் ஈற்றிலும் திருப்பெருந்துறைச் சிவனை இறைஞ்சி 'எம்பெருமான் பள்ளியெழுந்தருளாயே' என மாணிக்கவாசகர் சிவனை வேண்டிப் போற்றுகின்றார்.

இவ்வாறே திருமாலடியவரான தொண்டரடிப் பொடியாழ்வார், திருவரங்கப் பெருமானைப் போற்றித் திருப்பள்ளியெழுச்சி பாடியுள்ளமை இவண் குறிப்பிடத்தக்கதாகும். மாணிக்கவாசகரின் திருப்பள்ளியெழுச்சிப் பாடல் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தில் அமைந்து இலக்கிய இன்பத்தை நல்குவதைக் காணலாம்.

> "தாவில் நல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்
> சூதர் ஏத்திய துயிலெடை நிலையும்"

எனவரும் தொல்காப்பிய நூற்பாவில், தமது வலியாலே பாசறைக்கண் ஒரு மனக்கவர்சியின்றித் துயின்ற அரசர்க்கு நல்ல புகழைக்

கொடுத்தலைக் கருதிய சூதர், அத்துயிலெடுப்பின் ஏத்திய துயிலெடை என்ற துறையை ஆசிரியர் தொல்காப்பியனார் குறித்துள்ளார்.

> "துயிலெடை – துயிலினின்றும் எழுப்புதல் அஃதாவது பள்ளியெழுச்சி, துயிலெடை நிலையாகிய இத்துறை, அரசர்க்கு உரியதாய்த் தொன்றுதொட்டு வருமென்பதூஉம், சூதர், மாகதர், வேதாளிகர், வந்திகர் முதலாயினோருள் சூதர் என்பவரே இங்ஙனம் வீரத்தால் துயின்றாரைத் துயிலெழுப்புவர் என்பதூஉம், யாண்டும் முன்னுள்ளாரையும் பிறரையும் கூறப்படுமென்பதூஉம் கொள்க"

என நச்சினார்க்கினியர் உரைவிளக்கம் எழுதியுள்ளார். அரசர் அங்ஙனம் துயின்றமை பிறர்க்கும் புலப்படப் புகழ்தல் அவர் கருத்தாதலின் ஒருதலைக்காமம் உளதாயிற்று என்பது நச்சினார்க்கினியர் கருத்தாகும். *புறத்திணைத் துறைகளுள் ஒன்றாகிய இத்துயிலெடைநிலை உறங்கலும்* விழித்தலும் உடையராய் உணர்த்த உணரும் அரசர் முதலிய மாந்தர்க்கே உண்மையாக உரியதாகும். உறங்கலும் விழித்தலும் இன்றி, இமையா முக்கண்ணினனாய், தானே முழுதும் உணரும் இயற்கை உணர்வினனாய், நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் இறைவனாகிய சிவனைத் துயிலெழுப்புவது என்பது வெறும் உபசார வழக்கேயாகும். இருப்பினும், 'துஞ்சும் பொழுதாடுஞ் சோதி' ஆகிய சிவனை–அம்முதல்வனை, உறங்கி விழிக்கும் இயல்பினராகிய மாந்தர் தாம் துயிலெழுங்காலத்துத் தொழுது கொண்டு எழுதல் இன்றியமையாததாதலின், அவனருளாலே அவன் தாள் வணங்கித் துயிலெழும் வழிபாட்டு நெறிமுறையினை மாந்தர்க்கு அறிவுறுத்தும் நோக்கத்துடன் மாணிக்கவாசகர் திருவாய் மலர்ந்துள்ளார். இதனைச் சேக்கிழார் தம்முடைய பெரியபுராணத்தில்,

> "நீறணிந்தார் அகத்திருளும் நிறைகங்குற் புறத்திருளும்
> மாறவருந் திருப்பள்ளி யெழுச்சியினில்"

என விளக்கிப் பாடியிருப்பதைக் காணுகின்றோம். திருப்பெருந்துறையில் இறைவனால் ஆட்கொள்ளப்பெற்ற மாணிக்கவாசகர், வைகறைப்பொழுதில் துயிலெழுந்து திருப்பெருந்துறை இறைவனாகிய சிவனைப் போற்றி அடியார்களாகிய தங்களுக்கு

அருள்புரிய எழுந்தருளுமாறு சிவனை வேண்டித் துயிலெழுப்பும் நிலையில் பாடப்பெற்றது திருப்பள்ளியெழுச்சி என்னும் இத்திருப்பதிகமாகும்.

முன்னிலைப் பரவலாக அமைந்த இத்திருப்பதிகத்தில் திருப்பெருந்துறை இறைவனாகிய சிவபெருமானை இறைஞ்சி 'எம்பெருமான் பள்ளியெழுந்தருளாயே' எனப் பாடல்தோறும் மாணிக்கவாசகர் சிவனை வேண்டிப் போற்றுதலைக் காணலாம். இவ்வாறே திருமாலடியவரான தொண்டரடிப் பொடியாழ்வார் திருவரங்கப் பெருமானைப் போற்றித் திருப்பள்ளியெழுச்சி பாடியிருப்பதும ஒப்புநோக்கத்தக்கதாகும். 'பள்ளி எழுந்தருளாய்' என்னும் தொடர்க்கு சீகாழித் தாண்டவராயர் 'எமதுள்ளத்தில் திருப்பள்ளி ஒலக்கம் கொள்ள எழுந்தருள்க' எனச் சீகாழித் தாண்டவராயர் பொருளுரைத்தார்.

முடிவுரை

திருவாசகத்தில் நாட்டுப்புறப்பாடல்கள் வடிவங்களின் அடிப்படையில் தோன்றிய சிற்றிலக்கிய வகைகளாகவும், இளமகளிர் விளையாட்டுக்களை அடிப்படையாகக் கொண்டு இசைப்பாடல் வடிவில் தோன்றிய சிற்றிலக்கிய வகைகளாகவும் திருவம்மானை, திருப்பொற்சுண்ணம், திருக்கோத்தும்பி, திருத்தெள்ளேணம், திருச்சாழல், திருப்பூவல்லி, திருவுந்தியார், திருத்தோணோக்கம், திருவெம்பாவை ஆகியன அமைகின்றன.

மரபுத்தொடர்கள் காட்டும் தமிழர் பண்பாடு

வீ. ரேணுகாதேவி
இணைப்பேராசிரியர், மொழியியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை–625 021.

வாழும் ஒவ்வொரு மொழியிலும், அந்தந்தச் சூழலுக்கும், காலத்திற்கும் அம்மொழி பேசும் மக்களின் பண்பாட்டிற்கும் ஏற்ப மரபுத்தொடர்கள் உருவாகிக் கொண்டே இருக்கின்றன. ஒரு சில தோன்றிய வேகத்தில் மறைந்துவிடுகின்றன. மற்றவை நீண்ட காலத்திற்கு நிலைத்து நிற்கின்றன. புதுப்புது மரபுத் தொடர்களை உருவாக்குவதில் ஒவ்வொரு மொழியும் ஒரு அமைப்பு முறையினை பயன்படுத்துகின்றது. வரலாற்று மொழியியலில் மரபுத்தொடர் ஆக்கம் முக்கியமான ஒன்றாகும்.

மொழியில் மரபுத்தொடர்கள் தனித்தன்மை வாய்ந்தவையாக இருந்தாலும் அவை கலைச்சொற்கள் போலல்லாமல், எல்லாரும் வழங்கும் பொது மொழியைச் சார்ந்தவை. கருத்தையும், உணர்வையும், கற்பனையையும் வெளியிடும் கருவியான மொழி, ஒரு மரபுச்சாதனம் மொழியானது மரபு வழிப்பட்டதாக இருந்தாலும் குறிப்பிட்ட சூழ்நிலையில் சொற்பிரயோகமும், சொற்சேர்க்கையும் தனிப்பட்டவர்களின் செயற்பாடுகளாக இருக்கின்றன. இந்தச் செயற்பாடுகள் மொழியின் சமூக மரபிலிருந்து தனித்து நிற்பவை. இருப்பினும் சில சொற்சேர்க்கைகளும் அதாவது தொடர்களும் தனிமனிதர் செயற்பாட்டு நிலையிலிருந்து வளர்ந்து மரபாகப் பொதுமைப்பட்டு வழங்குகின்றன. இத்தகைய தொடர்களே மரபுத்தொடர்கள். தனிச்சொற்களைப் போல மரபுத்தொடர்களும் குறிப்பிட்ட பொருளை உணர்த்துகின்றன. (தற்காலத் தமிழ் மரபுத் தொடர் அகராதி 1999)

மரபுத்தொடருக்குச் சில தனிப்பண்புகள் இருக்கின்றன. பல மரபுத்தொடர்கள், வாழும் வாழ்க்கை அனுபவத்தை வெளிப்படுத்தும் சொற்கட்டாக அமைந்திருக்கும். அவை கருத்தோடு உணர்வையும்

வெளிப்படுத்தக் கூடியதாக இருக்கும். மரபுத்தொடர் சுட்டும் பொருளோடு உணரக்கூடிய பொருளும் அதில் தொக்கி நிற்கும். இதனாலேயே மரபுத்தொடர்களை அறிவியல் மொழியில் காண முடிவதில்லை. சொல்பவரும், கேட்பவரும், எழுதுபவரும், படிப்பவரும் நேருக்கு நேர் உறவாடுவது பேன்ற மொழிநடையில் பெரும்பாலான மரபுத்தொடர்கள் இருக்கின்றன. பல மரபுத்தொடர்கள் சுட்டும் பொருளுக்கு இணையான பொருளைத் தரும் நேர் சொற்கள் மொழியில் இருக்கலாம். ஒரே பொருளுக்கு மரபுத்தொடர்களும் நேர் சொற்களும் இருந்தாலும் மரபுத்தொடர்கள் உணர்வு வெளிப்பாட்டுக்குத் தேவையாகின்றன.

அவளை என் கழுத்தில் கட்டிவிட்டார்கள் என்ற வாக்கியத்தில் உள்ள கழுத்தில் கட்டு என்னும் தொடருக்கு இணையாக திருமணம் செய்தல் என்னும் தொடர் இருந்தபோதிலும், இங்கு வெறுப்பு என்னும் உணர்வினைக் காட்ட மரபுத்தொடர் பயன்படுகின்றது.

ஒரு மொழியின் இலக்கணக் கூறுகளில் ஒன்றான மரபுத்தொடர் பொருண்மை நிலையிலும் வாக்கிய அமைப்பு நிலையிலும் கட்டுண்ட சொற்களின் கூட்டு என்றும் கூறுவர். மரபுத்தொடர் ஒரு தொகுதியாகவே செயற்படும் மரபுத்தொடருக்கு என்று சில வரையறைகளும் கூறப்படுகின்றன, எனினும் எல்லா மரபுத்தொடர்களுக்கும் பொருந்தும் வரையறை ஒன்றைத் தருவதும், அந்த வரையறையின் அடிப்படையில் மரபுத்தொடர்களை இனம் கண்டு கொள்வதும் கடினம்.

1. மரபுத்தொடர் ஒன்றுக்கு மேற்பட்ட சொற்களைக் கொண்டதாக இருக்கும்.

உறுதிமொழி என்பது ஒரு சொல் தன்மையுடன் வழங்குகின்ற ஒரு தொகைச்செயல், இது ஒரு சொல்லாகக் கருதப்படுவதால் இது மரபுத்தொடராகக் கருதப்படுவதில்லை. நீலிக்கண்ணீர் என்பது ஒரு சொல் தன்மையுடன் வழங்குகிற ஒரு தொகைச் சொல்லானாலும், அதிலுள்ள சொற்களிலிருந்து வேறுபட்ட பொருளைத் தருவதால் மரபுத்தொடராகக் கொள்ளப்படுகிறது.

மருந்து என்ற பெயர்ச்சொல்லுடன் கு வேற்றுமை உருபு சேர்ந்து அதன்பின் கூட அல்லது உம் என்னும் இடைச்சொல் இணைந்து வரும் மருந்துக்கும் மருந்துக்குக் கூட என்பது முற்றிலும் வேறு பொருளைத் தருகிறது. மருந்துக்கும் என்பது ஒன்றுக்கு மேற்பட்ட சொற்களைக் கொண்டது அல்ல என்றாலும் அது தனிச்சொல்லைவிடக் கூடுதலாக இருப்பதாலும் முற்றிலும் வேறு பொருளைத் தருவதாலும் மரபுத்தொடர் ஆகிறது. எனவே இங்கு ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் என்ற வரையறை பொருந்தவில்லை.

2. மரபுத்தொடரிலுள்ள சொற்கள் மாறாத வரிசையில் வரும்

கல் நெஞ்சு என்ற தொடரிலுள்ள சொற்களை நெஞ்சு கல் என்று மாற்றி அமைத்தால் அம்மரபுத் தொடரின் பொருளைத் தராது எனினும் சில மரபுத்தொடர்களில் சொற்கள் இடம்மாறி வந்தாலும் இந்த மாற்றத்தால் அவற்றின் மரபுப்பொருள் மாறுவதில்லை.

வயிற்றில் ஈரத்துணியைப் போட்டுக் கொள் என்ற மரபுத்தொடரிலுள்ள முதல் இரண்டு சொற்களை இடம்மாற்றி ஈரத்துணியை வயிற்றில் போட்டுக்கொள் என்றாலும் அதே பொருளையே தருகின்றது.

3. மரபுத்தொடரில் உள்ள எந்தச் சொல்லுக்கும் அதே பொருளை உடைய வேறு ஒரு சொல்லை மாற்றாகத் தரமுடியாது என்பது மூன்றாவது வரையறை ஆகும். ஆனால் சில தொடர்களில் ஒரு சொல்லுக்குப் பதிலாக மற்றொரு சொல் வந்தாலும் மரபுப்பொருள் சிதைவதில்லை.

அரைக்கிணறு தாண்டு என்னும் தொடரில் அரை என்ற சொல்லுக்குப் பதிலாக பாதி என்ற சொல்லைப் பயன்படுத்துவதால் மரபுப் பொருளில் மாற்றமில்லை. ஆகவே பொருள் மாற்றத்தை ஏற்படுத்தாத பதிலீடுகளைக் கொண்ட தொடர்களும் மரபுத்தொடர்களாக இருக்கலாம்.

4. மரபுத்தொடரின் பொருள் அதிலுள்ள சொற்களின் கூட்டுப்பொருளாக இருக்காது தொடர் முற்றிலும் வேறுபட்ட

பொருளைத் தரும். இதுவே மரபுத் தொடரைப் பிற தொடர்களிலிருந்து வேறுபடுத்திக் காண்பதற்கு மிகவும் அடிப்படையாக அமைகின்றது.

அனல் கக்கு என்ற தொடரின் பொருள் அத்தொடரிலுள்ள தனிச்சொற்களான அனல், கக்கு என்பனவற்றின் நேர் பொருளிலிருந்து வேறுபட்டு மிக்க கோபம் வெளிப்படப் பேசுதல் என்ற பொருளைத் தருகின்றது.

தொடர்கள் நேர்பொருளில் அல்லாமல் மரபாக வேறு பொருளில் வழங்கும்போது இரண்டையும் வேறாக இனம் காணவேண்டும். கைகழுவு, காதுகுத்து போன்ற தொடர்கள் நேர்பொருளிலும், மரபுப்பொருளிலும் வழங்கும்போது நேர்பொருளா, மரபுப் பொருளா என்பதை அவை வழங்கும் சூழலைப் பொறுத்து முடிவுசெய்யவேண்டும். சில தொடர்களுக்கு மரபுப்பொருள் மட்டுமே உண்டு. நேர்பொருள் கிடையாது. வயிற்றிலடி என்பதில் வயிறு, அடி என்பது பழக்கமான சொற்களானாலும் நேர்பொருளில் வழங்குவதில்லை மரபுப் பொருளிலேயே வழங்குகின்றன.

அமைப்பு நிலையிலும் மரபுத்தொடர் ஒரு பெரிய உறுப்பாக வருமேயன்றி அதன் ஒரு பகுதியாக வராது. பிரித்தால் தொடர் பொருள் தராது. கம்பி நீட்டினான் என்ற மரபுத்தொடர் ஏமாற்றினான் என்ற பொருளைத்தரும். இதிலுள்ள சொற்களின் தனிப்பொருள்கள் மரபுத்தொடர் காட்டும் பொருளைத் தராது.

ஒரு குறிப்பிட்ட சூழலில் பேசுபவர் ஒரு தொடரைக் கூறுவர், அதைக் கேட்பவர் அந்த சூழலில் புரிந்துகொள்வர். இதற்கு முன்னர் அவ்விருவருமே அத்தொடரை பயன்படுத்தியிருக்க மாட்டார்கள். அத்தொடர் சாதாரணமாக அனைவருக்கும் தெரிந்த பேச்சுமொழியினால் ஆக்கப்பட்டதாக இருக்கும். அவ்வாறு பழக்கப்பட்ட சொற்கள் புதிய சூழலில் புதிய பொருளை கொடுத்து நிற்கும். அத்தகையத் தொடர்கள் ஆக்கப்பட்ட விதத்தில் அல்லது ஆக்கப்பட்ட சூழலில் முக்கியத்துவம் பெறுவதால் அவை நிலைத்து நின்று மரபுத்தொடர்கள் ஆகின்றன.

கடலை போடு என்ற தொடர் எண்பதுகளில் மாணவர்களால் உருவாக்கப்பட்ட ஒரு தொடர். இதற்குப் பொருள் ஒரு ஆணும் பெண்ணும் நீண்ட நேரமாக பேசிக்கொண்டிருக்கின்றனர் என்பது. எண்பதுகளில் மாணவர்களால் ஆக்கப்பட்ட தொடர் இன்று மரபுத்தொடராக பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

அல்வா சாப்பிடுவது போல என ஒருவர் கூறினால் ஒரு சூழலில் இதைக் கேட்பவரும் புரிந்துகொள்வார். இதில் பேசுபவரும் அல்வாவை சாப்பிடுகிறார் என்ற பொருளில் கூறவில்லை. கேட்பவரும் அந்தப் பொருளில் எடுத்துக்கொள்ளவில்லை. மாறாக ஈடுபாட்டின் காரணமாக ஒரு செயல் எளிமையாக இருக்கிறது என்ற பொருளை அத்தொடர் ஒரு குறிப்பிட்ட சூழலில் தருகிறது. அந்தப் பொருளின் சிறப்பினால் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு மரபுத்தொடர் ஆகின்றது. எனவே மரபுத்தொடர்கள், சூழலைப் பொறுத்தும், உரையாடுபவர்கள் பயன்படுத்திப் புரிந்துகொள்ளும் சொற்களைப் பொருத்தும், அவை அமையும் முறையினைப் பொருத்தும் உருவாகும்.

நாட்டுப்புற இலக்கியம் போன்ற மரபுத்தொடர்களும், பழமொழிகளும் பொதுவுடைமைச் செல்வம், மக்களின் சொல்லாற்றலைச் சுட்டிக் காட்டுபவையாக அமைகின்றன. மக்களின் பட்டறிவை பழமொழிகள் படம் பிடித்துக் காட்ட, மரபுத்தொடர்கள் மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தப் பயன்படுகின்றன.

தமிழர்களின் பண்பாடு பன்முகப் பயன்பாடு (Multi Cultural) ஆகும். ஒருவர் இறந்தார் என்பதைக் குறிக்க ஆங்கிலத்தில் (He Kicked the bucket) என்ற ஒரு மரபுத்தொடர் மட்டுமே பயன்பாட்டில் இருக்க தமிழர் தம் பண்பாட்டில் சுமார் பத்திற்கும் மேற்பட்ட தொடர்கள் ஒருவர் இறந்தார் என்பதை குறிக்க பயன்பாட்டில் இருக்கின்றன.

மண்டையைப் போடு, வாயைப் பிள, புட்டுக்கிட்டான் என்னும் மரபுத்தொடர்கள் இறத்தலைக் குறித்த போதும் இதில் இயல்பான அனுதாபம் இல்லாதது போன்று கூறுவதாக அமைகின்றது. சைவ மதத்தைச் சேர்ந்தவர் இறந்தால் அவர் சிவலோக பதவி அடைந்தார் என்றும் வைணவ மதத்தைச் சேர்ந்தவர் இறந்தால் வைகுண்ட பதவி

அடைந்தார் என்றும் கிறித்துவர் என்றால் கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார் என்றும் முஸ்லீம் என்றால் மௌத் ஆனார் என்றும். இறந்தவர் எந்த மதத்தைச் சேர்ந்தவர் என்பவதை வெளிப்படுத்தும் முகமாக மரபுத்தொடர்கள் அமைந்துள்ளதை காணமுடிகின்றது. ஒரு அரசியல்வாதி இறந்தால் அவர் மரணமடைந்தார் என்று கூறுகிறோம். சமுதாய படிநிலைகளில் உயர்நிலையில் உள்ளவர்கள் இறந்தால் காலமானார் இயற்கை எய்தினார் என்னும் தொடர்களைப் பயன்படுத்துகின்றனர். இறத்தல் என்னும் பொருளைக் குறிக்க பல்வேறு மரபுத்தொடர்கள் பயன்படுத்தப்படுகின்றன. அம்மரபுத் தொடர்களிலிருந்து இறந்தவரின் மதம் சமூக அந்தஸ்து போன்றவற்றைத் தெரிந்துகொள்ள முடிகின்றது.

எண்சாண் உடம்புக்கு சிரசே பிரதானம் என்பர். தலை என்ற சொல்லைப் பயன்படுத்தி தலைமுழுகு, தலைதூக்கு, தலைதப்பு, தலையணை மந்திரம், தலையில் கல்லைப்போடு போன்ற சமார் 73 மரபுத்தொடர்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அதே போன்றே முகம், முகத்திலுள்ள கண், காது, உதடு, பல் என்ற உறுப்புகளைப் பயன்படுத்தி முகத்தில் ஈயாடவில்லை கண்ணும் காதும் வைத்தாற்போல், பல்லைக்காட்டு என்பன போன்ற ஏராளமான மரபுத்தொடர்கள் உருவாக்கப்பட்டுள்ளன. முகமும், கண்ணும், உதடும் உணர்வுகளை வெளிப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. உயிரையும், உடம்பையும், இரத்தத்தையும் பயன்படுத்திப் பல மரபுத்தொடர்கள் ஆக்கப்பட்டுள்ளன. கை என்ற உடல் உறுப்பைப் பயன்படுத்தி கைக்குள் போடு கை கருணைக்கிழங்கு கை ஒடிந்தாற் போல, கை அரிசி, கை தூக்கிவிடு, கைச்சரக்கு, கை நழுவு, கை நனை, கை கொடு, கை கொட்டிச் சிரி, கை கழுவு, கை நீட்டு, கை மணம், கைப்பாவை, கைமாற்று, கைமாறு, கையில் அடக்கம், கையில் காலில் விழு, கையிறுக்கம் என்பன போன்ற சுமார் 75 மரபுத்தொடர்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

மரபுத்தொடர்களை உருவாக்கப் பயன்படுத்தும் சொற்கள் மக்கள் தம் வாழ்வியலோடு மிகவும் தொடர்பு உடையதாகக் காணப்படுகின்றன. உடல் உறுப்புகள் எவ்வாறு மரபுத்தொடர்களை

உருவாக்கப் பயன்பட்டதோ அதே போன்று மக்கள் தங்கள் அன்றாட வாழ்வில் மிகச்சாதாரணமாக பார்க்கும் ஆடு, மாடு, பூனை, ஆமை, குரங்கு, கிளி, ஈ, உடும்பு, கழுதை போன்ற விலங்கினங்களைக் குறித்த சொற்களையும், கருணைக்கிழங்கு, உப்பு, புளி, கத்தரிக்காய், கரும்பு என்று உணவிற்கு பயன்படுத்தும் பொருட்களின் பெயர்களையும் பயன்படுத்தி மரபுத்தொடர்களை உருவாக்கியுள்ளனர். எனவே மரபுத்தொடர்கள் என்பவை மக்களின் வாழ்வியலோடு ஒன்றி அவர்தம் உணர்வுகளை வெளிப்படுத்தப் பயன்படும் கருவியாக அமைந்துள்ளன. இம் மரபுத்தொடர்களை புரிந்துகொள்வது என்பது அம்மரபுத் தொடர்கள் வழங்கும் சமுதாயத்தையும், பண்பாட்டையும் அறிந்துகொள்வது என்பதாகும்.

மரபுத்தொடர்கள் அவை வழங்கும் சமுதாயத்தின் பண்பாட்டைப் பிரதிபலிப்பதாக அமைவதால் மரபுத்தொடர்களை வேறு ஒரு மொழிக்கு மொழிபெயர்க்கும் பொழுது பல சிக்கல்கள் எழுகின்றன. காட்டாக எள்ளும் தண்ணீரும் தெளி என்ற மரபுத்தொடர் இனி உறவு, உரிமை கொண்டாடுவது தேவையே இல்லை என்று கருதி முற்றிலுமாக விட்டுவிடுதலைக் குறிக்கும். இறந்தவர்களுக்கு எள்ளும், தண்ணீரும் இறைப்பது தமிழர் பண்பாடு, இதை மற்ற பண்பாடுகளில் காண இயலாது. எனவே மரபுத்தொடர்கள் அவை வழங்கும் சமுதாயத்தின் பண்பாட்டுக் கூறுகளை உள்ளடக்கி இருப்பதால் அவற்றை மொழிபெயர்ப்பு செய்வதும் கடினமானதாகவே உள்ளது.

சிந்தாமணி கூறும் அறம்

தி.வே.கோபாலய்யர்

சென்ற இதழ் தொடர்ச்சி.....

சீவகன் தன்மாமன் கோவிந்தனுக்குக் கட்டியங்காரன் சேமித்து வைத்த செல்வத்தை எல்லாம் வழங்கினான் தன் மைத்துனனும் பதுமையின் தமயனுமாகிய உலோக பாலனுக்கு அவன் வேண்டியன யாவும் நல்கினான்.

"கோமகன் கோலமான்தேர்க் கோவிந்தன் என்னும் கொய்தார்
மாமற்கு மடங்கல் ஆற்றல் கட்டியங்காரன் என்ற
தீமகன் உடைய எல்லாம் தேர்ந்தனன் கொடுத்துச் செல்வன்
ஓவலில் கறவை ஒத்தான் உலோகபா வற்கு மாதோ" – 2572

தன்துயர் நீக்கிய சுதஞ்சணனுக்கு ஒரு கோயில் அமைத்து அக்கோயிலினுள் அவன் வடிவத்தைப் பொன்னால் இயற்றி அக்கோயில் வழிபாட்டிற்கு ஓர் ஊரை நிவந்தமாக விடுத்து, அச்சுதஞ்சணன் சரிதத்தை ஒரு நாடகமாகச் செய்து நடத்தினான்.

"பேரிடர் தன்கண் நீக்கிப் பெரும்புணை யாய தோழற்கு
ஓரிடம் செய்து பொன்னால் அவன் உரு இயற்றி ஊரும்
பாரிடம் பரவ நாட்டி அவனது சரிதை எல்லாம்
தாருடை மார்பன் கூத்துத் தான்செய்து நடாயினானே"
– 2573

சீவகன் தான் சிறுவனாயிருந்த போது நண்பர்களொடு விளையாடிய ஆலமரத்திற்குப் பொற்பீடம் அமைத்து மாலைதட்டி, ஐந்து ஊரை அதற்கு இறையிலி ஆக்கினான்.

"ஊன்விளை யாடும் வைவேல் உறுவலி சிந்தித்து ஏற்பத்
தான் விளையாடி மேனாள் இருந்ததோர் தகைநல் ஆலைத்
தேன்விளை யாடுமாலை அணிந்து பொற்பீடம் சேர்த்தி
ஆன்விளை யாடும் ஐந்தூர் அதன்புறம் ஆக்கி னானே" – 2574

தன் தாயின் விருப்பப்படி அருகப்பெருமானுக்குப் புதியதாகக் கோயில் ஒன்று அமைத்து. அதன்கண் நாடோறும் நிகழ்த்தும் வழிபாட்டிற்கும் சிறப்பு நாள்களில் நிகழும் வழிப்பாட்டிற்கும் தேவையான

நிவந்தங்களை வழங்கி விழா நாள்களில் கூத்தும் பாட்டும் நிகழ ஏற்பாடு செய்து தான் கோயில் அமைத்து அதன் கண் பூசனைகளுக்கும் விழாக்களுக்கும் நிவந்தம் வழங்கிய தானப்பயனை எல்லாம், கைமாறு யாதும் கருதாது தன் தாயினை ஆதரித்த தவமுதுமகளிராய பொருட்பற்று அற்ற ஆர்யாங்கனைகளுக்கு நீர்பெய்து கொடுப்பித்தான்.

பொழிற்பிண்டி,

"எண்பால் இகந்து உயர்ந்தார்க்கு இசைந்த
கோயில் இயன்றதே" – 2600
"நியமம் சேர்த்தி விழா அயர்ந்து
வடிநீர் நெடுங்கண்ணார் கூத்தும் பாட்டும் வகுத்தாரே"
– 2601

"நவை தீர்த்தார்க்கு
இல்லையே கைம்மாறென்று இன்பமெல்லாம் அவர்க்கு ஈந்தாள்"
– 2602

தன் தாயின் விருப்பப்படி அவள் இவர்ந்து சென்ற மயில் பொறிக்கும் சுடுகாட்டில் அவளைக் காத்த தெய்வத்திற்கும் கோயிலமைத்துத் தன் தாய் தங்கி இருந்த மாடத்தில் மயில்பொறியின் ஓவியத்தையும் அவளைக் காத்த சுடுகாட்டுத் தெய்வத்தின் ஓவியத்தையும் அவள்நாடொறும் காணுமாறு வரைவித்தான்.

"தனியே துயருழந்து தாழ்ந்து வீழ்ந்த சுடுகாட்டுள்
இனியாள் இடர்நீக்கி ஏமம் சேர்த்தி உயக்கொண்ட
கனியார் மொழியாட்கும் மயிற்கும் காமர் பதிநல்கி
முனியாது தான்காண மொய்கொள்மாடத்து எழுதுவித்தாள்"
– 2603

சீவகன் தான் பிறந்த சுடுகாட்டை உணவுச் சாலையாக்கி 505 பிள்ளைகளுக்கு பாலும் பருப்புச்சோறும் நாடோறும் வழங்கத் தன் தாயின் விருப்பப்படி ஏற்பாடு செய்தான்.

"அண்ணல் பிறந்தாங்கு ஐந்நூற்று ஐவருக்கு அன்பால்
வண்ணச் சுவைய முதம் வைகநாளும் வழங்கினாள்
வேந்தற்பயந்தாளே" – 2604

சீவகன் தான் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த உடனேயே செய்த கொடைத் தொழில்களால் அவன் புகழ் நாட்டில் ஓங்கிப் பரவிற்று. இவை போல்வன அவன்வழங்கிய இடையில் வன்புகழ்க் கொடைமைச் செயல்களாகும்.

6. பிழைத்தோர்த்தாங்கும் காவல்

தாங்குதல்—பாதுகாத்தல். தடுத்தல்

தவறு செய்தவர்களை அவர்கள் செய்த தவறு பற்றி ஒறுக்காது, அவர்கள் தவறுகளை பெரிதும் மனம் கொண்டு வெகுளாது அவர்களுக்கும் பதுகாவல் தருதல். தவறான வழியில் செல்பவர்களை அவ்வழிகளில் செல்லாமல் தடுத்து அவர்களுடைய ஆன்மாக்களுக்கு பாதுகாவல் தருதல்.

இராசமாபுரத்து அரண்மனையின் பசுக்கூட்டங்களைக் கவர்ந்த வேடர்களுக்கு அஃது அவர் குலத் தொழிலாக அமைந்தமையின் அவர்கள் செய்த தவற்றுக்கு அவர்களை தண்டியாது அவர்கள் கவர்ந்த பசுக்கூட்டங்களை மீட்டு அவர்கள் உடலுக்கு ஊறு விளைக்காது அவர்களை விரட்டிய சீவகனுடைய செயலில் அவனுடைய பிழைத்தோர்த்தாங்கும் காவல் புலப்படுகிறது.

அறியாமையால் தவறான வழிகளைப் பின்பற்றி வாழும் மக்களுக்கு நேரிய வழியை உபதேசித்துஅவர்களை நல்வழிப்படுத்திய செயல்கள் பல சீவகனுடைய வாழ்க்கையில் காண்கிறோம்.

தன்னை இடரினின்று காத்து வித்தியாதர உலகுக்கு அழைத்துச் சென்ற சுதர்சணனிடம் விடை பெற்று நில உலகம் வந்து கால் நடையாகக் காட்டுவழியே நடந்து வந்த ஜீவகன் கிழங்கு, தேன், புலால் என்னும் இவற்றை சுமந்து மனைவியுடன் வந்த குறவர் தலைவனை எதிர்ப்பட்டு அவனுக்குத்தேன் ஊன்கள் போல்வன உண்பதனால் எதிர்காலத்து ஏற்படும் தீவினையை எடுத்துக்கூறித் திருந்திய வாழ்வு வாழுமாறு உபதேசிக்கச் சீவகனுடைய உபதேசத்தை மனம் கொண்ட அக்குறவன் திருந்தியம்மை

"ஊன் சுவைத்து உடம்பு வீக்கி நரகத்தில் உறைதல் நன்றோ
ஊன்தினாது உடம்புவாட்டித் தேவராய் உறைதல் நன்றோ
ஊன்றி இவ்விரண்டி னுள்ளும் நல்லது நீகூறு என்ன
ஊன்தினாது தொழிந்து புத்தேள் ஆவதே உறுதி என்றான்."
– 1235

"உறுதிநீ உணர்ந்து சொன்னாய் உயர்கதிச் சேறி யேடா
குறுகினாய் இன்ப வெள்ளம் கிழங்கு உணக் காட்டுள் இன்றே
இறைவன்நூல் காட்சிக்கு ஒல்லா ஒழுக்கொடு ஊன் துறத்தல் கண்டாய்
இறுதிக்கண் இன்பம் தூங்கும் இருங்கனி இவை கொள் என்றான்,"
– 1236

"என்றலும் தேனும் ஊனும் பிழியலும் இறுகநீக்கிச்
சென்றடி தொழுது செல்க என் றேம்பெய் நீள் குன்றம் என்று
குன்று உறை குறவன் போக" – 1237

என்று கூறப்பட்டிருப்பதலைக் காணலாம்.,

பதுமையை நீத்துக் காட்டு வழியே வந்த சீவகன் சித்திரக்கூடம் என்ற தவப்பள்ளியை அடைந்தான். அங்கே முனிவர்கள் பலர் தம்தம் மனைவியோடு ஊனைநீத்துப் புல் காய்கறி கிழங்கு இவற்றை உண்டு தவத்தில் ஈடுபட்டிருந்தவர்களைக் கண்டான். அவர்கள் பகலெல்லாம் கடும் தவம் செய்து இரவில் தம்தம் மனைவியோடு போகத்தைக் கழித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் சடை வளர்த்திருந்தனர். நாடொறும் பலகால் நீரில் முழ்கினர். பாயல் ஏதும் இன்றி வெறும் தரையில் படுத்து தூங்கினர். இலைக்குடிலில் வாழ்ந்தனர். துவர் ஆடையை உடுத்தினர். மரம் மீது பரண் அமைத்துத் தூங்கினர். ஆனால் காமநுகர்ச்சியை நீத்தாரல்லர்.

முனிவர்களின் தவ வாழ்க்கையை போற்றிய சீவகன் மகளிர் நுகர்ச்சியை நீத்தாலன்றி அவர்களுடைய தவவாழ்க்கை சிறிதும் பயன்தராது என்பதை அவர்கள் உள்ளத்தில் பதியுமாறு விளக்கிக் கூறினான்.

மரத்தில் பரண் அமைத்து அங்கிருந்து காயும் பழங்களும் உண்டு தவம் செய்வதனால் தீவினை யாவும் நீங்கும் எனின், பழங்கள் உண்டு மரங்களில் தொங்கிக் கொண்டிருக்கும் ஒவ்வொரு வெளவாலுக்கும் வீடுபேறு கிட்ட வேண்டும்.

"தூங்குறிக் கிடந்து காயும் பழங்களும் துய்ப்ப நில்லா
பாங்கலா வினைகள் என்றார் பகவனார் எங்கட்டு என்னின்
ஓங்குநீள் மரத்தில் தூங்கும் ஒண்சிறை ஒடுங்கல்வாவல்
பாங்கரில் பழங்கள் துய்ப்பப் பழவினை பரியும் அன்றே" – 1429

புல்லரிசியையும் பூக்களின் அகவிதழ்களையும் உண்டு நாற்புறமும் தீவளர்த்துக் கதிரவன் வெப்பத்தின் கீழ் ஐந்து தீக்களின் நடுவில் இருந்து தவம் செய்வதால் பழவினைகள் நீங்கும் என்றால், பாலைநிலத்தில் கொடிய கதிரவனுடைய வெப்பத்தைத் தாங்கிக் கொண்டு கிட்டிய உணவினை சிறுகற்களோடு உண்டுஉயிர்வாழும் பாலை நிலப்பறவைகளும் புறாக்களும் பழவினையை வென்று வீடு பெற வேண்டும்.

"அல்லியும் புல்லும் உண்டாங்கு ஆரழல் ஐந்துள் நின்று
சொல்லிய வகையின் நோற்பத் துணியும் வெல்வினைகள் என்னின்
கல்லுண்டு கொடிய வெம்பும் கானுறை புறவம் எல்லாம்
புல்லிய வினையை வென்று புறக்கொடை காணு மன்றே" – 1430

தலைமயிரினை நீட்டி சடையாக்கி பலகாலும் நீரில் மூழ்கி வெறுந்தரையில் படுத்து உடம்பை வருத்தலால் மேம்பட்ட வீடுபேற்று நிலையை அடையலாம் எனின் கரடியும் அடிக்கடி நீரில் மூழ்கி தளராமல் படுத்து உறங்குவதனால் வீடுபேற்றை அடைய வேண்டும்.

"நீட்டியசடையம் ஆகி நீர்மூழ்கி நிலத்தில் சேர்ந்து
வாட்டிய உடம்பின்யாங்கள் வரகதிவிளைத்தும் என்னின்
காட்டிடைக் கரடி போகிக் கய மூழ்கிக் காட்டில் நின்று
வீட்டினை விளக்க வேண்டும் வெளிற்றுரை விடுமின் என்றான்"
–1431

மாடமாளிகையில் மேம்பட்ட கட்டில்களை மெத்தை தலையணி முதலியவற்றொடு மகளிர் போகம் துய்த்தலை விடுத்துக் காட்டில் அமைக்கப்பட்ட இலைக்குடில்களில் வெறும்தரையிலேயே படுத்து மகளிர் போகம் துய்ப்பதனால் பண்டைவினைகள் நீங்கும் எண்ணின் நாடோறும் இலைக்குடில்களில் வசித்து வெறும்தரையிலேயே தம்தம் மனைவியை புணர்ந்து வாழும் குறவருக்கும் வீடுபேறு கிட்ட வேண்டும்.

"கலைவளர் கிளவியார்தம் காமர்மென் சேர்க்கை நீங்கி
இலைவளர் குரம்பை யங்கண் இருநிலம் சேக்கையாக
முலைவளர் ஆக ந்தோய முழுவினை முரியுமாயின்
மலைவளர் குறவர்க்கு அம்மா வினைகளும்மாயும் அன்றே"– 1432

வெள்ளிய ஆடைகளில் உதிரம்படிவதனால் ஏற்படும் குருதிக்கறையைப் போக்க அவ்வாடை முழுவதையும் குருதியில் தோய்க்கலாமா ? பெண்களின் பற்றினால் பிறந்த தீவினையை பெண்களைப் புணரும் செயலினால் போக்க முடியுமா?

"வெண்ணிறத் துகிலி னாங்கண் வீழ்ந்து மாசாகின்ற
ஒண்ணிற உதிரம் தன்னை உதிரத்தால் ஒழிக்கலாமா?
பண்ணிறக் கிளவியார்தம் பசையினால் பிறந்த பாவம்
கண்ணிற முலையினார்தம் கலவியால் கழிக்கலாமா?" – 1433

அணிமையில் இருக்கும் நெருப்பினால் ஆடை தீய்ந்து போகுமோ என்று கருதி அந்நெருப்புத் துண்டினை எடுத்து ஆடையில் பொதிந்து வைத்துக்கொண்டால் நெருப்பு ஆடையோடு உடலையும் சுடாது போகுமா? தம் வீடுகளைத் துறந்து அம்மகளிரைக் காட்டிற்கு அழைத்து வந்து புணர்வதனால் காமம் கெடுமா?

"நுண்துகில் வேதல் அஞ்சி நெருப்புஅகம் பொதிந்து நோக்கிக்
கொண்டுபோய் மறைய வைத்தால் கொந்தழல் சுடாது மாமே?
கண்டத்தின் நாவியார் தம் கடிமனை துறந்து காட்டுள்
பண்டைச் செய் தொழிலின் பாவம் பறைக்குற்றால்
பறைக்கலாமே?"–1434

அறிவுப் பொருளாகிய ஆன்மா, அறிவற்றப் பொருள்களாகிய ஏனைய இவற்றின் தன்மையை உள்ளவாறு அறிதலே நன்ஞானமாகும். அங்ஙனம் அறிந்தவற்றை ஐயம் திரிபறத் தெளிதலே நற்காட்சியாகும். அறநூல்களில் விதித்தன செய்து விலக்கியன நீக்கி உயிருக்கு உறுதியாவன செய்தல் நல்லொழுக்கமாகும். இம்மும்மணிகளை பின்பற்றி வாழும் வாழ்க்கையிலேயே இருவினையைப் போக்கலாம்.

"மெய்வகை தெரிதல் ஞானம் விளங்கிய பொருள்கள் தம்மைப்
பொய் வகை இன்றித் தேறல் காட்சி ஐம்பொறியும் வாட்டி
உவ்வகை உயிரைத் தேயாது ஒழுகுதல் ஒழுக்கம் மூன்றும்
இவ்வகை நிறைந்த போழ்தே இருவினை கழியும் என்றான்"
–1436

"நீர்பலகால் மூழ்கி நிலநடைஇ தோல் உடீஇச்
சோர்வடை தாழச் சுடர் ஓம்பி ஊரடையார்
கானகத்த கடவுள் விருந்தோம்பல்
வானகத்து உய்க்கும் வழி"

என்பன புறத்துறவுக்கு உதவுவன. இவற்றோடு அகத்துறவும் கோடலே வீடுபேற்றுக்கு வழி. அகத்து உறவுகோடலை நீக்கவேண்டும் என்று சீவகன் சித்திரகூட முனிவருக்கு உபதேசித்து அவரை நல்வழிப்படுத்தினான்.

வனவரன் தன்னை வடிவழகு நாடி வந்த பவதத்தன் மனைவி அநங்கமா வீணைக்கு அழியக்கூடிய இப்புண்புலால் யாக்கையின் அழகின் நிலையாமையை அவள் உள்ளத்து அழுத்தமாக இடம்பெறும் வகையில் அறிவுறுத்தித்தானும் பழிச்செயலினின்று உய்ந்தான்.

"என்பினை நரம்பில் பின்னிஉதிரம் தோய்த்து இறைச்சி மெத்திப்
புண்புறம் தோலைப் போர்த்து மயிர்புறம் பொலிய வேய்ந்திட்டு
ஒன்பது வாயிலாக்கி ஊன்பயில் குரம்பை செய்தான்
மன்பெருந் தச்சன் நல்லன் மயங்கினார் மருள என்றான்"-1577

"உருவம் என்று உரைத்தி யாயின் நிறைந்த தோல் துருத்தி
தன்னைப்
புருவமும் கண்ணும் மூக்கும் புலப்பட எழுதி வைத்தால்
கருதுவது அங்கு ஒன்று உண்டோ? காப்பியக் கவிகள்காம
எரிஎழ விகற்பித் திட்டார் இறைச்சிப் போர் இதனை என்றான்"
– 1585

தவறான வழியில் செல்ல முற்பட்ட அநங்மாவீணையை வனசுரன் தன் நல்ல உபதேசத்தால் நல்வழிப்படுத்த முயன்ற செய்தியைக் காண்கிறோம்.

தன் மனைவியைப் பிரிந்த பவதத்தனுக்கு அவன்புலம்புறு நிலை கண்ட சீவகன் மகளிர் இருதிறத்தவர். கற்புடை மகளிர் கற்பில் மகளிர் என, அவருள் கற்புடைமகளிர்.

> "சாமெனின் சாதல் நோதல் தன்னவன் தனந்தகாலைப்
> பூமனும் புனைதல் இன்றிப் பொற்புடன் புலம்ப வைகிக்
> காமனை என்றும் சொல்லார் கணவற்கை தொழுது வாழ்வார்.
> தேமலர் திருவோ டொப்பார் சேர்ந்தவன் செல்லல் தீர்ப்பார்"
> –1598

என்று கற்புடைய மனைவி திறத்தை உயர்த்திக்கூறி, கற்பில் மகளிரைப் பற்றி

> "பெண் எனப்படுபவள் கேண்மோ பீடில பிறப்பு நோக்கா
> உன் நிறைவு உடைய அல்லர் ஒராயிர மனத்த ஆகும்.
> எண்ணிப்பத்து அங்கையிட்டால் இந்திரன் மகளும் ஆங்கே
> வெண்ணெய்க்குன்று எரியுற்றாற்போல்மெலிந்து பின் நிற்கும்
> அன்றே " – 1597

எனப் பவதத்தன் மனைவி அநுங்கமாவீணையின் மனநிலையைக் குறிப்பாக கூற பவதத்தன் தன் மனைவி சிறந்த கற்புக்கரசி என்று புகழ, அவன் உள்ளத்தில் திரிவு ஏற்படக்கூடாது என்ற எண்ணத்தான் சீவகன் பவதத்தனுக்கு வசிய மந்திரத்தை உபதேசித்து அதனைப் பலகாலம் உச்சரிப்பதனால் மந்திரத்தின் வலிமையால் அவன் மனைவி அநுங்கமாவீணை அவனையே என்றும் விரும்பி உணருமாறு தன் மந்திர வலிமையால் இந்த இளையர்கள் என்றும் இளையராக இருக்க உதவினான். சீவகசிந்தாமணியில் பிழைத்தோர்தாங்கும் காவல் இத்தகைய இடங்களில் காணப்படுகிறது.

பொருளோடு புணர்ந்த பக்கம்

தலைவர்கள் பொருளை இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்தவற்றை நேரிய முறையில் வகுத்தலும் திறம்படச் செய்தலாகிய அறவெற்றியாகும். அறிவுமயமான ஆன்மா இவ்வுடலினின்றும் வேறானது. கிட்டுதற்கு அரிய மனித யாக்கையில் தோன்றிய ஆன்மா அதன் ஆக்கம் கருதிச்செய்யும் செயல்களே மெய்ச் செயல்கள் என்று ஆன்மா வெற்றிக்கு முயறல் ஆகும்.

சீவகன் தன் ஐம்பதாவது வயதில் அரசைத் துறந்து துறவறத்தை மேற்கொள்ளும்முன் தன்முதல் மகன் சச்சந்தனை அரசனாக்கி அவனுக்குக் கூறிய உபதேசங்களில் பொருளோடு புணரும் அறவெற்றியைக் காண்கிறோம்.

ஒவ்வொருவரும் தம் குலதருமத்தைப் பின்பற்ற வேண்டியது இன்றியமையாததாகும். உலகம் எல்லாம் நின்குடைநிழலில் தங்கும்படி பார்த்து உலகினைச் செங்கோல் வளையாமல் காத்து அமைச்சரையும் அறத்தையும் பாதுகாக்க வல்லையாயின் நினக்கு மறுமையில் உண்டாகாத இன்பமே இல்லை.

"பால்வளை பரந்து மேயும் படுகடல் வளாகம் எல்லாம்
கோல்வளை யாமல் காத்து உன் குடைநிழல் துஞ்ச நோக்கி
நூல்விளைந் தனைய நுண்சொல் புலவரோடு அறத்தை ஓம்பின்
மேல்விளை யாத இன்பம் வேந்த மற்று இல்லை கண்டாய்"–2906

யானைக்கு நெற்கவளத்தை முறைமையால் நாளும் அரிந்து தீற்றின் அதற்கு உணவும் ஆகும். நெற்பயிர் அழிதலுக்கும் வாய்ப்பு இன்றாம். அங்ஙனம் தின்னாமல்

மால்களிறு தானே கழனி மேய விடப்படுமாயின் களிற்றிற்கும் போதிய உணவு கிட்டாது. பயிறும் கால்களால் துகைக்கப்பட்டு அழிந்துவிடும். அத்தன்மை போல மன்னனும் கொள்ள வல்லவனாய் முறைமையேயாற் கொள்ளின் உலகும் அவன் வழி நின்று பயன்படும்.

"வாய்ப்படும் கேடும் இன்றாம் வரிசையின் அரிந்து நாளும்
காய்த்தநெல் கவளம் தீற்றின் களிறுதான் கழனி மேயின்
வாய்ப்படல் இன்றிப் பொன்றும் வல்லனாய் மன்னன் கொள்ளின்
நீத்தநீர் ஞாலம் எல்லாம் நிதிநின்று சுரக்கும் அன்றே" – 2907.

உலகத்து மக்கட்கெல்லாம் நெல்லும் உயிர் நீரும் உயிர். இவ்விரண்டும் யான் கூறும் அளவில் சிறந்த உயிரல்ல. உலகிற்குச் சிறந்த உயிர் மன்னன் காண்.

"நெல்லுயிர் மாந்தர்க்கெல்லாம் நீர் உயிர் இரண்டும் செப்பின்
புல்லுயிர், புகைந்து பொங்கும் முழங்கு அழல் இலங்கு வாட்கை
மல்லலங் களிற்று மாலை வெண்குடை மன்னர் கண்டாய்
நல்லுயிர் ஞாலம் தன்னுள் நாமவேல் நம்பி என்றான்" – 2908

ஊரவல்லான் தேரை ஒத்த நிலத்து ஊருமாயின் மிகப்பலகாலம் தேர் பழுதின்றிப் பயன்படும். அதனை ஊரும் நிலம் இது அன்று என அறியாது ஊருமாயின் அதுவும் பழுதுபட்டு அழியத் தானும் அரசாட்சியும் அத்தன்மைத்தே யாகும்.

"ஆர்வலம் சூழ்ந்த ஆழி அணிமணித் தேரைவல்லான்
நேர்நிலத்து ஊரு மாயின் நீடுபல் காலம் செல்லும்
ஊர்நிலம் அறிதல் தேற்றாது ஊருமேல் முறிந்து வீழும்
தார்நில மார்ப வேந்தர் தன்மையும் அன்ன தாமே" –2909

வேந்தர் அருளோடு அறியுடையவராகி ஒருவன் காய்ந்துஎறியும் கல்லினைக் காலம் வரும் அளவும் கவுளிலே மறைத்து வைத்த களிறு போல பகைவர் மேல் சென்ற கோபம் மாற்றி அவர்தாம் விரும்புவனவற்றை எல்லாம் ஆராய்ந்து கொடுத்து அவரை அழிக்கின்ற எண்ணத்தால் மறைத்தலே அரசர்க்கு நற்பொருளாவதாம்.

"காய்ந்து எறி கடுங்கற்றன்னைக் கவுள்கொண்ட களிறு போல
ஆய்ந்து அறிவுடையராகி அருளோடு வெகுளிமாற்றி
வேர்ந்தர்தாம் விழைப எல்லாம் வெளிப்படார் மறைத்தல் கண்டாய்
நாந்தக வுழவ ரேறே நன்பொருளாவ தென்றான்" – 2910.

குடிமக்கள் உன்கண் குற்றம் கண்டு உன்னைப்பழியாதவகையில் அவர்களைப் பாதுகாத்தல் அஃது உனக்குப் பெரிய வலிமையாக அமையும். மற்ற மனிதர்கள் உனக்குப் பணிந்து வாழ்வர். ஓரெழுத்துப் பொய் ஊரையாதே. பொய் உரையாதே. பொய் உரைத்தால் உன் அரிய புகழைப் கெடுத்து விடும். கற்றுவல்ல சான்றோர்களை ஆதரித்தல் உன்கடமை என்பதனை மறவாதே.

"குடிபழியாமை ஓம்பின் கொற்றவேல் மன்னர்மற்றுன்
அடிவழிப் படுவர் கண்டாய் அரும்புகழ் கெடுதல் அஞ்சி
நொடியல் ஓர் எழுத்தும் பொய்யை நுண்கலைநீ த்தம் நீத்திக்
கொடியெடுத் தவர்க்கு நல்கு, கொழித்துணர் குமர என்றான்"
– 2911

வலம்புரிச் சங்கம் கடலில் பிறப்பின் அல்லது குளத்தில் எந்நாளும் பிறவாது. அதுபோலக் கொடையாகிய தானமும், உத்தமதானமும் அருந்தவமும் ஆராயின் மண்மேல் செல்வமுடையார்க்கல்லது வறியவர்களாகிய ஏழைகளுக்கு நிகழ்த்துவதற்குரிய வாய்ப்பு இல்லை.

"கருங்கடல் பிறப்பின் அல்லால் வலம்புரி காணுங்காலை
பெருங்குளத்து என்றும் தோன்றா பிறைநுதற் பிணையனீரே
அருங்கொடைத் தானம் ஆய்ந்த அருந்தவம் தெரியின் மண்மேல்
மருங்குடை யவர் கல்லால் மற்றையர்க் காவ துண்டோ?"–2924

மலைகளில் அல்லாது மற்ற இடங்களில் வயிரம் தோன்றாது. குளத்தில் அன்றி வெறுந்தரையில் குவளை மலர் பூவாது. அவைபோலத் தகுதிப்பாடு உடையவர்கள் அன்றி இவ்வுலகில் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் ஆன்மநேயம் உடையராய் இருத்தல் அரிது.

"அட்டுநீர் அருவிக் குன்றத்து அல்லது வயிரம் தோன்றா
குட்டநீர்க் குளத்தின் அல்லால் குப்பைமேல் குவளை பூவா
விட்டுநீர் வினவிக் கேண்மீன் விழுத்தகை யவர்கள் அல்லால்
பட்டது பகுத்துண்பார் இப்பார்மிசை இல்லை கண்டீர்" – 2925

ஆருயிர் கொண்டு நிற்கும் வருத்தத்தை நீக்கி அற்றவர்களுக்கு உண்ணும் சோற்றை வழங்குதல் துறக்கத்திற்கு வழியாகும். ஆன்மநேயத்தோடு கோபம்கடிந்து தேனையும் ஊனையும் துறப்பார்களாயின் அவ்வறத்தினால் மண்ணும் விண்ணும் வந்து வணங்கும் சிறப்பினைப் பெறுவார்கள்.

"அற்றவர் வருத்தம் நீக்கி ஆருயிர் கொண்டு நிற்கும்
துற்றவிழ் ஈதல் செம்பொன் துறக்கத்திற்கு ஏணி யாகும்
முற்றுயிரோ ம்பித் தீந்தேன் ஊனோடு துறப்பின் யார்க்கும்
மற்றுரை இல்லை மண்ணும் விண்ணும் நும்அடிய அன்றே"
–2927

முற்பிறப்பில் பிறர்க்கு இட்டு உண்ணாதார் பின்பு அழுக்கினை உடையவாகிய சிறிய ஆடைகளை முள்ளாகிய ஊசியினால் தைத்த தையல் மொய்த்த ஆடையைக் குளிர்மிக்க காலத்துக்கு உடையாகக் கொண்டு ஓட்டினை ஏந்திப்பாவாய் பிச்சையிடுக என்று பேசிச் செல்வர் மனையினுடன் சோற்றிற்குக் கூவிக்கூவி நிற்பர்.

"மாசித் திங்கள் மாசின கிண்ணத் துணி முள்ளின்
ஊசித் துன்ன மூசிய ஆடை உடையாகப்
பேசிப் பாவாய் பிச்சை எனக்கை அகல் ஏற்றிக்
கூசிக்கூசி நிற்பர் கொடுத்துண்டு அறியாதார்" – 2929

சீவகன் தன்னை வினவிய வழிப்போக்கனுக்கு வழங்கிய உபதேசம் பின்வருமாறு

நல்லதானம், சீலம், தூயதவம், கடவுட்பூசனை என்று சொல்லிய நான்கும் எனக்கு மனைவியர் நால்வர் ஆவன. இந்நால்வர் வயிற்றிலும் பிறந்து பயன்தருவானாகிய நல்வினை என்னும் மகனே என்னை மேற்கதிக்குக் கொண்டுபோகும் உறவோன். அவனைப் பெற்றவரே உண்மையான மகனைப் பெற்றவராவர். அல்லாதார் மகப்பெற்றோர் அல்லர். அவர் பெற்ற மகவும் மகவல்ல.

படநாகம் தோல் உரித்தாற்போன்று அகமும் புறமும் தூயவாகத் துறந்து நோற்றுத் தம் வயத்தனாக ஐம்பொறிகளையும் வென்ற உண்மைத் துறவிகளுக்கு உவந்து கொடுத்தல் தானமாம். தேன் முதலியவற்றை உண்மையாகத் துறத்தல் சீலமாம். இரண்டு உவாவிலும் அட்டமியிலும் பட்டினியிருந்து ஓவாது ஒழுக்கம் காத்தலே கெடாத்தவம். இறைவன் பாதத்தே நாடொறும் பூ முதலியவற்றால் புனைதலே பூசனை. இந்நால்வரும் மனைவியராக நல்வினையையே மகனாக உடையார் சுவர்க்கத்தேபோய் இந்திரராய் அவ்விடத்தை ஆண்டு பின் சக்கரவர்த்தியாய் பூமி முழுவதையும் ஆண்டு வாமனுக்குப் பூசனைகள் நடத்தி அதீதாவத்தை விளைவித்துப் பின் வீடுபெறுதலே உண்மையாம்.

அயலார் இல்லாத சுற்றத்தார் ஊர்க்கே போனாலும் அவருடனே வெகுண்டு ஆண்டுச் செய்யாதீர்போலப் பொதிசோருக் கொள்ளாமல் புறத்து ஓரடி எடுத்துவைக்க மாட்டீர்கள். கூற்றுவன் நும்மைக்

கட்டிக்கொண்டு ஓட நுமரில்லாத ஊர்க்குத் தனியே போம்பொழுது உண்ணும் ஊனுக்குப் பொதிசோறு மனிதப்பிறவியில் நலமாக இருக்கும் இப்பொழுதே தேடிக்கொள்ளவேண்டாவா?

"நற்றானம் சீலம் நடுங்காத்தவம் அறிவர்சிறப்பு இந் நான்கும்
மற்றாங்குச் சொன்ன மனைவியர் இந்நால்வர் அவர் வயிற்றுள் தோன்றி
உற்றான் ஒருமகனே மேற்கதிக்குக் கொண்டுபோம் உறவோன் தன்னைப்
பெற்றார் மகப்பெற்றார் அல்லாதார் பிறர்மக்கள் பிறரே கண்டீர்"
–1545

"படநாகம் தோலுரித்தாற் போல்துறந்து கண்டவர்மெய் பனிப்ப நோற்றிட்டு
உடனாக ஐம்பொறியும் வென்றார்க்கு உவந்தீதல் தானமாகும்
திடனாகத் தீந்தேனும் தெண்மட்டுமுயிர்க் குழாமீண்டி நிற்றற்
கிடனாகு மூனுமிவை துறத்தலே சீலமென்றுரைத்தார் மிந்கோர்" – 1546

"ஓவாது இரண்டு உவவும் அட்டமியுங் பட்டினி விட்டு ஒழுக்கம் காத்தல்
தாவாத்தவமென்றார் தண்மதிபோல் முக்குடைக்கீழ்த் தாதைபாதம்
பூவே புகைசாந்தம் சுண்ணம் விளக்கு இவற்றால் புனைதல் நாளும்
ஏவா இவை பிறவும் பூசனை என்று ஈண்டியநூல் கரை கண்டாரே" – 1547

இந்நால்லார் துணைவியராக் காதல்மகன் இவனா உடையார்
போகிப்பொன்னார மார்பின் புரந்தரராய்ப் பூமி முழுவதும் ஆண்டு
மன்னாகி முக்குடைக்கீழ் வாமன் சிறப்பியற்றி வரம்பில் இன்பம்
பின்னா விளைவித்துப் பிறவா செய்தல் பேசலாமே?
– 548

"வேற்றுவரில்லா நுமருக்கே செல்லினும் வெகுண்டீர் போல
ஆற்றுணாக் கொள்ளாது அடி புறத்து வைப்பீரே அல்லிர்
போலும்
கூற்றம் கொண்டோடத் தனியே கொடுநெறிக்கண் செல்லும்
போதில்
ஆற்றுணாக் கொள்ளீர் அழகலால் அறிவொன்றும் இலீரே
போலும்" – 1550

மதியை முனிகின்றமுகத்திய ருடைய அம்மதியின்கதிரை உள்ளடக்குவதோர் ஆம்பல் போலும் முறுவலை வாயை நச்சினார். முடிவில்லாத காலமெல்லாம் தீக்கதிகளிலேயே தோன்றி வெவ்வேறு யாக்கை கொண்டு முற்றத்திரிவர்.

"பனிமதி யின்கதிர் பருகும் ஆம்பல்போல்
முனிமதி முகத்தியர் முறுவல் நம்பினார்
துனிவளர் கதிகளுட் தோன்றி நாடகம்.
கனியநின்று ஆடுவர்கடையில் காலமே" – 1554

எழில்மிக்க பெரிய மதியின் கதிருக்குத் தாமரை அஞ்சுமாறு போலே கிளவியார் கோலத்திற்கு அஞ்சினார் பலரும் தொழும்படி மிக்குத் தேவராய் சுவர்க்கத்தை ஆளுவார்.

"நிழல்நிமிர் நெடுமதி நிகரில் தீங்கதிர்
பழன வெண்தாமரை பனிக்கு மாறுபோல்
குழல்நிமிர் கிளவியார் கோலம் அஞ்சினார்
தொழ நிமிர்ந்து அமரராய்த் துறக்கம் ஆள்வரே" –555

உடம்பு என்னும் சோலையில் சேர்ந்த பிணி என்னும் தீயொருங்கு அதனைவிட்டுப் போகாமல் தங்கி வனப்பு என்னும் கான்சேர் மலர் வாடும்படி அச்சோலையை சுட்டு நீறாக்கிய பின்னரே தான் அதனைவிட்டு நீங்கும்.

"ஊன் சேர் உடம்பு என்னு மோங்கன் மரச்சோலை
தான் சேர் பிணி என்னும் செந்தீக் கொடிதங்கிக்
கான் சேர்கவின் என்னும் காமர் மலர்வாட
தேன் சேர் மலர் மார்ப தீத்திட்டு இறக்குமே" – 2797

மணியினது நீலநிறத்தைக் கொண்ட மயில் அந்நிறம் நீங்கி வெழுத்து. முலையும் பைபோல ஞான்று கண்களும் இமை அழுகிக் குறைந்து மேனிஒளிகெட்டு மூப்பு வந்து துன்புறுத்தும்முன் உலகியல் இன்பங்களைத் துறந்து வாழ்வீராக.

"நீல்நிறம் கொண்ட ஐம்பால் நிழல்மணி உருவம் நீங்கிப்
பால்நிறம் கொண்டு வெய்ய படாமுலை பையில் தூங்கி
வேல்நிறமழைக்கண் தாமும் இமைகுறைந்து அழுகி மேனி
தான்நிறம் கரக்கும் காலம் தையலீர் மெய்ய தன்றே"—2940.

எனவே கிட்டுதற்கரிய மனித யாக்கையும், யாக்கையின் உடல் வளமும். செல்வ வளமும். பண்டை நல் வினையால் கிட்டியுள்ள இந்நிலையிலேயே ஆன்மநேயம் உடையேமாய், உத்தமமான தானங்களைச் செய்து துறவிகளைப் புரந்து பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பி வறியர் முதலியோரைப் போற்றி ஐம்பொறி அடக்கி விரதங்காத்து மறுமையின் நல்லின்பத்திற்குரிய செயல்களிலேயே நாள்களைக் கழிக்கும் **பொருளோடு புணர்ந்த பக்கம்** ஒருவகை அறவெற்றியாகும்.

இச்செய்தி

"திருந்திய நல்லறச் செம்பொற் கற்பகம்
பொருந்திய பொருளோடு போகம் பூத்தலால்
வருந்தினும் அறத்திறம் மறத்தல் ஓம்புமின்
கரும்பெனத் திரண்டதோள் கால வேற்கணீர்" – 2935.

என்ற முத்தியிலம் பகப் பாடலாலும் வலியுறுத்தப் பெறுகிறது.

அறவுத்திறன் அது எல்லோரும் விரும்பும் இன்பத்தை நல்கிப் பக்குவமுடையோர் அடையும் வீடு பேற்றிற்கும் வழிவகுக்கும் என்பது.

அடுத்த இதழில் தொடரும்.....

பதிப்பாசிரியர்

பேராசிரியர். திரு. இரா. சதாசிவம்

ஆசிரியர் குழு

முனைவர். திரு. தமிழண்ணல்

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

டாக்டர் திரு. ந. சேதுராமன்

முனைவர். திரு. சுப. அண்ணாமலை

முனைவர். திரு. ம.ரா.போ.குருசாமி

முனைவர். திரு. அ.அ.மணவாளன்

முனைவர். திரு. அ. தட்சிணாமூர்த்தி

இராசா. திரு. T.N.S. முருகதாஸ் தீர்த்தபதி

முனைவர். திரு. செ. கந்தசாமி

முனைவர். திரு. க. சின்னப்பா

பதிப்பாசிரியர், இரா.சதாசிவம், 2/404, மருதுபாண்டியர் தெரு, வட்டாட்சியர் நகர், மதுரை-20. © 2532879.
ஆசை அச்சகம், மதுரை. © 26 222 50, 98434-32484

மதுரைத் தமிழ்ச்சங்க நூற்றாண்டு மலருக்கு

அறிஞர்களே!
புலவர்களே!
சான்றோர்களே!

தமிழ், தமிழ்ப் பண்பாடு,
தமிழ்ச் சமுதாயம், தமிழ்ச்சங்கம்
மற்றும்
வள்ளல் பாண்டித்துரைத் தேவர்
குறித்த கட்டுரைகளை வழங்குவீர்!

தொடர்பு முகவரி

பதிப்பாசிரியர்
செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை – 625 001.
போன் : **(0452)-5575615**

முதல்வர்
செந்தமிழ்க் கல்லூரி,
மதுரை – 625 001.
போன் : **(0452)-2343707**